Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-10 23-01-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை -340

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:48A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247

# பாதிக்கப்பட்ட மக்கள் யாராக இருப்பினும் உதவிகள் கிடைக்க வழி செய்யுங்கள்!

## நோர்வே உயர் மட்டக்குழுவிடம் தேசியத் தலைவர் பிரபாகரன் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

**சுனாமி அனர்த்தத்திற்கு என உலகம் முழுவதிலும் இருந்து வருகின்ற உதவிகளைப் பெற்றெடுத்து அதனை சமத்துவமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற ரீதியில் அவர்கள் எவ்வின மக்களாக இருந்தாலும் சரி–அவர்களுக்கு இவ் உதவிகள் கிடைக்கக் கூடிய ஒழுங்குகளை செய்யுங்கள் என்று தேசியத் தலைவர் அவர்கள் நோர்வே உயர் மட்டக்குழுவிடம் கேட்டுக்கொண்டதாக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

நேற்று நடைபெற்ற தேசியத் தலைவருக்கும், நோர்வே சமாதான பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத தெரிவித்தார்.

அத்தோடு, மேலும் பல்வேறு கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

கேள்வி: இன்று நடைபெற்ற

(12ஆம் பக்கம் பார்க்க)



## மன்னாரில் புவியதிர்வு உறுதிப்படுத்தப்படவில்லை

### புவியியல் ஆய்வாளர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் அரிப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற அதிர்வு இதுவரை புவியதிர்வு என்று உறுதிப்படுத்தப்படவில்லை என புவி ஆய்வாளர் ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

மன்னாரில் புவியதிர்வு ஏற்பட்டதாக எவ்வித பதிவுகளும் இல்லை. இது தொடர்பாக நாங்கள் மன்னார் அரசாங்க அதிபருக்கு தகவல் அனுப்பியுள்ளோம். எனவே இந்த அதிர்வு வேறு ஏதாவது காரணத்தினால் ஏற்பட்டிருக்கலாம் என்றும் மன்னார் புவியதிர்வு ஏற்படக்கூடிய தன்மையை கொண்டில்லாத பிர

(12ஆம் பக்கம் பார்க்க)



நில அதிர்வால் வெடித்துள்ள வீடு ஒன்றின் சுவர்.
(படம் : மகா)

## சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் அடுத்த வாரம் பிரஸல்சில் கூடுகின்றன

சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் மீளாய்வுக்கூட்டம் அடுத்தவாரம் பெல்ஜியத்தின் தலைநகர் பிறஸல்சில் நடைபெறவுள்ளது. சுனாமி அனர்த்தத்தின் பின் இக் கூட்டம் கூட்டப்படுவதால் முக்கியத்துவம் பெறுகிறது.

கிட்டத்தட்ட மூன்று வருடங்களாக எந்த விதமான முன்னேற்றமும் இன்றி அமைதி முயற்சிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. ஆகவே, சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை மற்றும் பல விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக உதவி வழங்கும் நாடுகள் கூடவுள்ளன. சிறிலங்கா அரசின் கூட்டணிக்கட்சியான

(11ஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம்

21-11-2001 அன்று மன்னார் மாவட்ட முருங்கன் பகுதியில் சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

கப்டன்- ஜேசு
(பிறின்ஸ்சராம்- மரியநாயகம்/ அருள் கண்ணாட்டிமுருங்கன் மன்னார்)
என்னும் போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## மீள்குடியமர்வு, புனர்நிர்மாணத்திற்கான உதவிகளை ஒன்றுபடுத்தும் நேரமிது

### நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹில்ட்ஜே. ஜோன்சன்



சுனாமி அழிவு பற்றியும் எவ்வாறு நாம் உதவலாம் என்பது பற்றியும் கலந்துரையாடினோம். நாம் முதலில் நிவாரண, மீட்புப் பணிகளிற்காக உதவியுள்ளோம். மீளக் குடியமர்தல், புனர்நிர்மாணத்திற்காக உதவிகளை ஒன்று படுத்தப்படும் நேரம் இது என நான் நினைக்கிறேன். வடக்கு,கிழக்குப் பகுதியின் தேவை இதைப்பற்றியே இன்று கலந்துரையாடினோம். இவ்வாறு நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹில்டஜே ஜோன்சன் செய்தியாளரிடம் தெரிவித்தார். நேற்று தமிழீழத் தேசியத் தலை

(11ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இத்தாலி தொடர்ந்தும் உதவிகளை வழங்கும்

### இத்தாலியப் பிரதிப் பிரதமர் தெரிவிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வட கிழக்கு மக்களுக்கு மேலும் உதவிகளை இத்தாலிய அரசாங்கம் வழங்கும் என்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அந் நாட்டின் பிரதிப் பிரதமரும் வெளிநாட்டமைச்சருமான ஷியான் பிராங்கோ தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்திருந்த

(11ஆம் பக்கம் பார்க்க)

## இரு உலங்குவானூர்தி பாகங்கள் கட்டுநாயக்கவில் கண்டு பிடிப்பு

இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட இரண்டு உலங்கு வானூர்திகளின் பாகங்கள் கட்டுநாயக்கவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவை கடந்த 18 ஆம் 19 ஆம் திகதிகளில் இலங்கைக்கு சுனாமி அனர்த்த நிவாரணங்கள் என்ற வகையில் அரச சார்பற்ற அமைப்பினால் கொண்டு வரப்பட்டவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை இவற்றை கட்டுநாயக்க வானூர்தி தளத்தில் இருந்து வெளியில் எடுத்துச்செல்லப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் சிதைவடைந்த முல்லை நகரை நோர்வே உயர்மட்டக்குழு பார்வையிட்டது!


(அலுவலக செய்தியாளர்)

சுனாமிபேரலைகளால் முற்றாக சிதைவடைந்துபோன முல்லை நகரை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தலைமையிலான நோர்வேக் குழுவினர் நேற்று பார்வையிட்டுள்ளனர்.


நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் தமிழீழ காவல்துறையின் விசேட பாதுகாப்புடன் தொடரணியாக முல்லைத்தீவை வந்தடைந்த இக்குழுவினர் செந்தளிர் சிறுவர் இல்லம், முல்லைத்தீவு மகாவித்தியாலம்,முல்லை நகரப் பகுதி வண்ணாங்குளம் உட்பட முழுமையான பாதிப்புக்குள்ளான பகுதிகளை பார்வையிட்டனர். இப்பகுதிகளைப் பார்வையிட்ட நோர்வேக் குழு

(11ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே உயர் மட்டக் குழுவின் வன்னி விஜயம்







படகுகள் திருத்துமிடத்தில்...



முல்லை நகரைப் பார்வையிடுகையில்





மக்கள் மத்தியில் எரிக் சூல்கெய்ம்



கிளி. திட்டமிடல் செயலகத்தில்...





முல்லை செயலணிக்குழுவுடனான சந்திப்பு...

## சாவு அறிவித்தல்

### கந்தையா செல்லையா



கருங்காலியைப் பிறப்பிடமாகவும், இல:961, தட்டாதெரு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பதுளைச் செல்லையா என்று அழைக்கப்படும் கந்தையா செல்லையா (முன்னாள் உரிமையாளர், செல்லையா ஸ்ரோர்ஸ்-சுன்னாகம்) அவர்கள் (20.01.2005) வியாழக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் முருகானந்தன் உதவி அரச அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறைB.K ) புவனேஸ்வரி, கதிர்காம நாதன்(சிறிநாதன் களஞ்சியம், இல:961, கே.கே.எஸ் வீதி, தட்டாதெரு யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திராதேவி, நடராசா (தீபிகா களஞ்சியம் நெல்லியான் வீதி சுழிபுரம்) சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கோகுலன், கோபிகா, தீபிகா, சுகிஜா, மயூரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.01.2005 வெள்ளிக்கிழமை சபாபதி லேன் கொக்குவிலில் நடைபெற்றது. பிற்பகல் 2.00 மணியளவில் (பு.நே) பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்

*தலையாளி வைரவர் கோவிலடி,*
*பூநாறி மரத்தடிச்சந்தி, சபாபதிலேன்,*
*கொக்குவில், யாழ்ப்பாணம்.*

*(5362)*

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு
*1923*
*04*
*23*



உதிர்வு
*2004*
*01*
*23*

அமரர்
### பொன்னையா சரஸ்வதி

"ஓர் ஆண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும்
மறப்போமா உம் நினைவை.

தகவல்
குடும்பத்தினர்

*(சி.11216)*

"அடுத்து என்ன நடக்கும் என்பதை நீ தெரிந்துகொள்ளா வண்ணம் கடவுள், இன்பத்தையும், துன்பத்தையும் மாறிமாறி வரவிடுகின்றார்"
(சபை உரையாளர் 7:14b)

## சுனாமி அழிவின் 31 ஆம் நாள்

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த எம் உறவுகளுக்கான
**கண்ணீர் அஞ்சலியும் இரங்கல் திருப்பலியும்.**

**இடம்:** புனித சூசையப்பர் சிற்றாலயம், முல்லைத்தீவு.
(முல்லைத்தீவு எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக)

**காலம்:** 25-01-2005 செவ்வாய்க்கிழமை.

**நேரம்:-** காலை 08.45 மணி.

"சேர்ந்த உறவும் இணைந்த உள்ளமும்
தொடர்ந்து வாழும் என்றுமே"

### போக்குவரத்து வசதி

| ஆரம்பிக்கும் இடம்:- | செல்லுமிடம்:- |
| --- | --- |
| புதுக்குடியிருப்பு<br>இரணைபாலை<br>செம்மலை-அளம்பில்<br>முள்ளியவளை<br>கேப்பாப்புலவு-வற்றாப்பளை | முல்லை டிப்போ |
| புறப்படும் நேரம் காலை 07.30 | நிகழ்வு ஆரம்பிக்கும் நேரம் காலை 08.30 |

குறிப்பு:-போக்குவரத்து இலவசம்.

பங்குத்தந்தை,
முல்லைத்தீவு.

(5587)

# பிராந்தியப்பிரச்சினை, இரு தரப்பு உறவு;
# இந்தியா - சீனா பேச்சுவார்த்தை

(பீஜிங்)

**இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது, கூடுதல் ஒத்துழைப்பு சர்வதேச மற்றும் பிராந்தியப் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையேயான பேச்சுவார்த்தை நாளை நடைபெறவுள்ளது.**

இந்தியக் குழுவுக்கு வெளியுறவுச் செயலர் ஷியாம் சரணும் சீனத் தரப்பில் அதன் ஆசிய விவகாரங்களுக்கான வெளியுறவுத் துறையின் துணை அமைச்சர் வூடாவி ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி கூறியதாவது:-

இரு தரப்பு உறவை மேம்படுத்துவது, உலக மற்றும் பிராந்திய அளவிலான பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை பகிர்ந்து கொள்வது ஆகியவை இப் பேச்சுவார்த்தையின் முக்கிய குறிக்கோளாகும்.

ஈரானின் அணு ஆயுதப் பிரச்சினை, போருக்குப் பின் ஈராக் நிலைமை, தீவிரவாதம், உலகமயமாக்கலின் விளைவுகள் ஐ.நா அமைப்பை சீர்திருத்தி அமைப்பது மற்றும் எரிசக்தி பாதுகாப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்படும். அமெரிக்கா போன்ற உலகின் சக்தி வாய்ந்த நாடுகளுடனான உறவு வைத்துக் கொள்வது குறித்து இரு தரப்பு அதிகாரிகளும் விவாதிப்பர். இரு தரப்புப் பேச்சுவார்த்தை முதலில் வூ,சரண் ஆகியோருக்கு இடையே நடைபெறும். அதன் பிறகு குழு அளவிலான பேச்சு நடைபெறும்.



ஈராக்கில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலையான சீனர்கள்

## சரக்குக் கப்பல் மூழ்கியது 14 மாலுமிகளைக் காணவில்லை

வடகொரிய கிழக்குக் கடற் பகுதியில் சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கியதில் 14 மாலுமிகள் காணாமல் போயுள்ளனர்.

இக்கப்பல் ரஷ்யாவின் வட கிழக்கில் அமைந்துள்ள விளாடிவோஸ்டோக் துறை முகத்தில் இருந்து 4150 டன்கள் இரும்புப் பொருட்களை ஏற்றிக் கொண்டு சீனாவில் உள்ள குயிங்டாவோ துறைமுகம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

இக்கப்பலில் வியட்நாம், சீனாவ்வச் சேர்ந்த 8 மாலுமிகள் உட்பட 18 பேர் இருந்தனர்.

அருகே சென்று கொண்டிருந்த மற்றொரு ரஷ்யக் கப்பல் மூழ்கிய கப்பலில் இருந்த 2 வியட்நாம் மற்றும் 2 கொரிய மாலுமிகளைக் காப்பாற்றியது.

## சம்பள சீரமைப்புக் கோரி பிரான்சில் இரண்டு இலட்சம் தொழிலாளர் பேரணி

(பரீஸ்)

ஆள் குறைப்பு, சம்பள சீரமைப்பு உட்பட சில கோரிக்கைகளை வலியுறுத்தி பிரான்ஸ் நாட்டில் ரயில்வே, விமானத் துறை உட்பட பல்வேறு துறை ஊழியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள்.

3 ஆவது நாளாக இந்தப் போராட்டம் நேற்றும் நீடித்தது. இவர்களுக்கு ஆதரவாக ஆசிரியர்களும் போராட்டத்தில் குதித்ததால் ஒரு நாள் அனைத்துப் பள்ளிகளும் மூடப்பட்டன.

விமான ரயில்போக்குவரத்து நாடு முழுவதும் பாதிக்கபட்டுள்ளது. போராட்டத்தின் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் தொழிலாளர்கள் பரீஸ் உட்பட முக்கிய நகரங்களில் கண்டனப் பேரணி நடத்தினார்கள். இதில் 2 இலட்சத்து 10 ஆயிரம் பேர் பங்கேற்றனர். தலைநகர் பரீசில் பேரணியில் மட்டும் 50 ஆயிரம் பேர் பங்கேற்றார்கள்.

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர இடம் கோருகிறது ஜப்பான்

(டோக்கியோ)

ஜப்பான் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர இடம் கோருகிறது.

ஐ.நா.வுக்கு இதுவரை ஜப்பான் அளித்துள்ள பங்களிப்பே நிரந்தர இடம் அளிப்பதற் கான தகுதியாகும்.

ஜப்பான் பாராளுமன்றக் கூட்டத் தொடரின் 150 ஆவது நாளான வெள்ளிக்கிழமை உரையாற்றிய ஜப்பானியப் பிரதமர் ஜுனிசிரோ கொய்சுமி இதை அறிவித்தார்.

சர்வதேச அளவில் ஜப்பானின் பங்களிப்பையே இதற்கான தகுதியாகக் கொள்ளலாம். இதற்காக சர்வதேச நாடுகளின் ஆதரவைத் திரட்டும் பணியில் ஜப்பான் தீவிரமாக ஈடுபடும் என்றும் அவர் கூறினார்.

விரிவு படுத்தப்படும் ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர இடம் அளிக்க வேண்டும் என்று இந்தியா, பிரேசில், ஜேர்மனி ஆகிய நாடுகளும் கோரி வருகின்றன.



சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசே மாநிலத்தில் ரோந்துப் பணியில் ஈடுபடும் இந்தோனேசிய இராணுவத்தினர்.

## அவுஸ்திரேலியாவின் இரு விமானங்கள் நடுவானில் மோதின

### -ஒரு விமானமோட்டி உயிர் பிழைத்தார்

(கான்பரோ)

அவுஸ்திரேலியாவின் தென் பகுதியில் உள்ள சேல் நகரில் விமானப் படையைச் சேர்ந்த 2 விமானங்கள் பயிற்சியில் ஈடுபட்ட சமயத்தில் எதிர்பாராத விதமாக நடுவானில் 2 விமானங்களும் மோதிக் கொண்டன.

இதில் ஒரு விமானம் தரையில் விழுந்து நொருங்கியது. அதை ஓட்டிய விமானி பரசூட் மூலம் குதித்து உயிர் தப்பினார். மற்றொரு விமானம் பத்திரமாகத் தரையிறக்கப்பட்டது.

## நியூசிலாந்தில் நிலநடுக்கம்

(வெலிங்டன்)

நியூசிலாந்து நாட்டின் தலைநகர் வெலிங்டனுக்கு மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 7.56 மணி அளவில் நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.5 புள்ளியாக பதிவாகியது.

கட்டடங்கள் லேசாகக் குலுங்கின. இதனால் வீடுகளில் இருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தனர். கடைகளில் அலுமாரிகளில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் எல்லாம் கீழே சரிந்து விழுந்ததாக வியாபாரிகள் கூறினர்.

இருப்பினும் இந்த நில நடுக்கத்தால் சேதமோ, உயிர் இழப்போ ஏற்படவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை இதே பகுதியில் 5.3 ரிக்டர் அளவில் அடுத்தடுத்து 10 முறை நிலநடுக்கம் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## புஷ்ஷின் பதவியேற்பில் ஜோன் ஹெரியும் பங்கேற்பு

(வோஷிங்டன்)

பதவி ஏற்புவிழாவில், சனாதிபதித் தேர்தலில் புஷ்சை எதிர்த்து சனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்த ஜோன்ஹெரியும் கலந்து கொண்டார். புஷ் பதவி ஏற்று முடிந்ததும் கூடியிருந்தவர்கள் கை தட்டி தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்தனர். அப்போது ஜோன் ஹெரியும் கைதட்டி மகிழ்ச்சியை தெரிவித்தார்.

அவ்வப்போது புன்னகைத்தபடி அருகில் இருந்தவர்களிடம் அவர் பேசினாலும் அவர் தனது ஏமாற்றத்தை மறக்க முயன்றது தெரிந்தது.

## பக்ரீத் பண்டிகை 514 கைதிகள் விடுதலை

(ரமாத்)

பக்ரீத் பண்டிகையையொட்டி மொறாக்கோ மன்னர் முகமது சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கினார். இதனைத் தொடர்ந்து 514 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

## ராட்சத மீன்கள் கரைஒதுங்கின

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில் கலிபோர்னியா பகுதியில் பலத்த மழை கொட்டியது. இதன் எதிரொலியாக கலிபோர்னியா தெற்குப் பகுதியில் இருக்கும் "நியூ போர்ட்" கடற்கரையில் ராட்சத மீன்கள் கரை ஒதுங்கின. குவியல் குவியலாக அவை இறந்து கிடக்கின்றன. இந்த மீன்களை அகற்றும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.



நேற்று முன்தினம் பாக்தாத்தில் நடந்த கார்க்குண்டு வெடிப்பில் பலியான தனது மகனின் உடலின் அருகில் அழுது கொண்டிருக்கும் ஈராக்கியர்.



ஈராக் தலைநகர் பாக்தாத்தின் தெற்குப் பகுதி நகர் திருமண விருந்து ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 12 மக்களது உடல்கள் ட்றக் வண்டி ஒன்றிலிருந்து இறக்கி சவப் பெட்டிகளில் வைக்கப்படுகின்றது.

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## -நோயாளர்கள் பெரும் அவலம்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் முக்கியமான சில மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரியவந்துள்ளது.**

மேற்படி விடயம் தொடர்பாக கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சிவானந்தனுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்,

வைத்தியசாலை மருந்துக் களஞ்சியத்தில் உயர் குருதிய முத்தம் (பிறசர்) நோய்க்கான நீடிப்பின், அரினடோல், சோபிற்றேற்,நீரிழிவு (சலரோகம்) நோய்க்கான சோபிற்றேற் மற்றும் அன்ரிபயோட்டிக் குளோஸ் சாசிலின் குளிகைகள் போன்ற வற்றிற்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் மருந்துப் பொருட்கள் சில வைத்தியசாலைக்கு கிடைக்கப் பெற்றுள்ள பொழுதிலும் மேற்படி மருந்துவகைகள் கிடைக்கப் பெறாமையின் காரணமாக வைத்திய சாலையில் இம் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக மேற்படி நோய்த்தாக்கத்திற்குள்ளானவர்கள் மருந்துவகைகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)


## போக்குவரத்தில் அவலம்

14அடிஉயரமான நாயாற்றுப்பாலம் சுனாமியால் முற்று முழுதாக அழிந்துள்ளது. இதனால் நாயாற்றுப்பகுதிக்கு பேருந்துக்கள் எவையும் செல்வதில்லை. இதனால் செம்மலை கிழக்கு, நாயாற்றுப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களைஎதிர்கொள்கின்றனர். (20)

# க.பொ.த (உ/த)கணித,விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்களுள் ஒருவரான ஆசிரியர் அன்பழகன் அவர்களினால் க.பொ.த உ/த-2005 பரீட்சை எடுக்கும் கணித, விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று கீழ்வரும் அட்டவணைக்கு அமைவாக நடைபெறவுள்ளதால் உரிய மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ மாணவர்அமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர். முல்லைத்தீவு வலய மாணவர்கள் 23.01.2005- ஞாயிறு மாலை 2.00 மணிக்கு புதுக்குடியிருப்பு ம.வி,கிளிநொச்சி வலய மாணவர்கள் 24.01.2005- திங்கள் மாலை 3.00மணிக்கு கிளிநொச்சிமத்தியகல்லூரி. (சோ)



முல்லைத்தீவுப் பகுதியில் குடிநீர் கிணறுகளுக்குள் உவர் நீர் உட்புகுந்ததால் அந்நீரினை சுத்தம் செய்து மக்களுக்கு விநியோகிப்பதை படத்தில் காணலாம். (படம்:- வரன்)

# நீர் தூய்மைப்படுத்தும் பொறியொன்றை ஜேர்மன் நிறுவனம் வழங்கியது

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நீர் மாசடைந்துள்ள பிரதேசங்களுக்கான நன்னீரை வழங்கும் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டி ஜேர்மனியின் உடற்பயிற்சியாளர்களை இணைக்கும் நிறுவனம் 17.01.2005 அன்று 54,000 லீற்றர் நீரைச் சுத்திகரிக்கக் கூடிய ஒரு பொறியை அன்பளிப்புச் செய்துள்ளது.

முன்னாள் புனர்வாழ்வு புனருத்தாரண அமைச்சர் வைத்திய கலாநிதி ஜெயலத் ஜெயவர்த்தனாவுடன் வந்த நிறுவனத்தின் தலைவர் டெற்மார் டொறிங் மேற்படி பொறியினை விடுதலைப்புலிகளின் அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கனிடம் கையளித்தார். 12.5 மில்லியன் பெறுமதியான இப்பொறி 5000குடும்பங்களுக்கான நீர்த் தேவையை நிறைவேற்றக் கூடியது.

இந்தப் பொறியின் செயற்பாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை தமிழர்புனர்வாழ்வுக் கழகம் ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# நட்புதவியாளர் பயிற்சி செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

ஜி.ரி.இசற் நிறுவனத்தால் இன்றுமுதல் 26ஆம் திகதிவரை புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று வலயங்களில் நடைபெறவிருந்த நட்புதவியாளர் பயிற்சி செயலமர்வு இன்றும், நாளையும் புதுக்குடியிருப்பு ஸ்ரீ.சுப்பிரமணியம் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளதென முல்லை வலய கல்விப் பணிப்பாளர் த..குருகுலராஜா தெரிவித்துள்ளார். அத்துடன் இச் செயலமர்வில் அனைத்து முல்லைவலய நட்புதவியாளர்களையும் தவறாதுகலந்துகொள்ளும்வண்ணம் வேண்டியுள்ளார். (சோ)

# ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு பிரதான வீதியை புனரமைப்பதில் கவனம் செலுத்துக!

புதுக்குடியிருப்பில் இருந்து ஒட்டுசுட்டான் செல்லும் பிரதான வீதி நீண்ட நாட்களாக புனரமைக்கப்படாமல் உள்ளது குறித்து அவ்வீதியைப் பயன்படுத்தும் பலதரப்பட்டோரும் கடும் விசனமுற்றுள்ளனர். நீண்டகாலமாக சுட்டிக்காட்டப்பட்ட நிலையிலும் கூட இவ்வீதியைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து அவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

சுமார் 18 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரமுள்ள இவ்வீதி வன்னிப் பகுதிப் பயன்பாட்டில் உள்ள முக்கியமான வீதி என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வீதியூடாகவே புதுக்குடியிருப்பு, புளியங்குளம் பிரதான போக்கு வரவுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த மாத காலத்தில் மிகவும் பாதிப்புக்குள்ளான மேற்படி வீதியில் அடிக்கடி வாகனங்கள் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாவதும் நடந்து வருகிறது.

இதுதவிர இவ்வீதியுடன் இணையும் கற்சிலைமடு முத்தையன்கட்டு வீதி மற்றும் மன்னாகண்டல் முத்தையன் கட்டு ஆகிய வீதிகளும் கடும் சேதத்திற்குள்ளாகிக் காணப்படுகின்றன. இதனால் முத்தையன் கட்டுப் பகுதிக்கான பேருந்து போக்குவரத்து சீரான முறையில் நடைபெறுவதில்லை என அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வயோதிபர்கள், நோயாளர்கள் எனப் பலதரப்பட்ட பிரயாணிகளும் 6 முதல் 8 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே பேருந்து போக்கு வரத்தை தொடர்வதாக அப்பகுதி கிராமவாசி ஒருவர் தெரிவித்தார். இவ்விடயத்தை கவனத்தில் எடுத்து தமக்கான போக்குவரவு வீதியை சீரமைத்துத்தர சம்பந்தப்பட்டவர்கள் இது வரையும் எதுவித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து அவர் கவலை தெரிவித்தார். (து)

# தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகங்களில் சுனாமியால் பாதிப்புற்றோருக்கு உதவியளித்தோர்

(அலுவலக செய்தியாளர்)

05.01.2005 தொடக்கம் 18.01.2005 வரையான காலப்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணிமனை கிளிநொச்சி, தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்ட செயலகம் ஆகிய இடங்களில் சுனாமி அனர்த்த நிவாரணப்பணிக்காக அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற பண விபரங்கள் கீழ் வருமாறு:-

| | |
|---|---|
| வைத்திலிங்கம்முத்து(ஊரகவளர்ச்சிப்பணி) | 5000.00 |
| திருமதி எஸ்.ராஜி(கொழும்பு) | 4000.00 |
| திருநாவுக்கரசு பிரபாகரன் (நோர்வே) | 10000.00 |
| முரசுமோட்டை விவசாயத்திட்டக்குழு | 15000.00 |
| உதயபாலன் (டுபாய்) | 9000.00 |
| எஸ்.ஈஸ்வரி | 100000.00 |
| செந்தில் குணராசா (கொழும்பு) | 50000.00 |
| D R. நடேசன் (மலேசியா) | 50000.00 |
| ரி.எ.ஏனேஸ்ற் (கொழும்பு) | 25000.00 |
| எ.சிவரட்ணம் (கொழும்பு) | 10000.00 |
| பி. புஸ்பநாதன் (சுவிஸ்) | 50000.00 |
| கே.எவ். ரவீந்திரராஜா (சிட்னி) | 30000.00 |
| ந.துதிகரன் (கொலண்ட்) | 118000.00 |
| D R.எஸ். யோகராசா (லண்டன்) | 190000.00 |
| சி.கோபிரமணன் (துணுக்காய்) | 20000.00 |
| திரு.செல்வரட்ணம் (லண்டன்) | 50000.00 |
| பி..ஐங்கரன் | 50000.00 |
| D R. சிதம்பரநாதன் (கிளிநொச்சி) | 5000.00 |
| Kare och Barbara (swedan) | 6950.00 |
| Inga och Sting (Swedan) | 6950.00 |
| Madeline och Gunnar (Swedan) | 6950.00 |
| எஸ். தயாகரன் (பாகரின்) | 27624.00 |
| சி.என். நிரஞ்சன் (பாகரின்) | 27624.00 |
| ஆ.யசோதரன் (பாகரின்) | 27624.00 |
| எஸ். உமாகாந்தன் (பாகரின்) | 27624.00 |
| பி.மித்துலகரன் (பாகரின்) | 27624.00 |
| ரி.கணேஸ்ராஜா (பாகரின்) | 27624.00 |
| சண்முககாந்தி (பாகரின்) | 11050.00 |
| தர்சன் (பாகரின்) | 5525.00 |
| சோ.அருள்ராஜா (லண்டன்) | 25000.00 |
| Asian c0mputer center (Jaffna) | 12500.00 |
| த.தபோதினி (கொக்குவில்) | 5000.00 |
| கு.இந்திரகுமார் (கைதடி) | 6000.00 |
| ச.ரமேஸ் (ஜேர்மன்) | 5000.00 |
| சிறிமகாவிஷ்ணு களஞ்சியம் (கொக்குவில்) | 14800.00 |
| க.கோடிஸ்வரன் (ஜேர்மன்) | 510000.00 |
| அ.ரவிக்குமார் (லண்டன்) | 100000.00 |
| சரஸ்வதி சண்முகநிலையம் (கைதடி) | 100000.00 |
| வே.விஜயகுமார் (கனடா) | 15000.00 |
| அமரர்.பே.கதிர்வேலு (சாவகச்சேரி) | 8000.00 |
| க.பழனிவேல்பிள்ளை (கொக்குவில் | 3000.00 |
| சி.இராசமணி (நீர்வேலி) | 50000.00 |
| உ.ராதாகிருஷ்ணன் (இணுவில்) | 10000.00 |
| சிறிஅற்புதரத்தினவிநாயகர் சனசமூகநிலையம் (கனடா) | 204320.00 |
| அன்ரன் பெனடிற் (கனடா) | 10000.00 |
| யூலியன் பெனடிற் (கனடா) | 10000.00 |
| திமோதிபெனடிற்(கனடா) | 21000.00 |
| அருள்நிதி | 30000.00 |
| துளசிதாசன் | 10000.00 |
| திரு.பல்மார் மெதடிஸ்சேச் (யாழ்ப்பாணம்) | 15000.00 |
| Micro Pcsystem (jaffna) | 12500.00 |
| திரு.இராஜகோபாலன் , சிறிராஜன் நண்பர்கள் (சுவிட்சர்லாந்து) | 59290.00 |
| ஜி.சோதிராஜ் (இராமநாதபுரம் வட்டக்கச்சி) | 10000.00 |
| சரவணதாஸ் தவாரகன் வரணி சித்தன்குறிச்சி பூநகரி (த.மு.லண்டன்) | 20000.00 |
| காராளப்பிள்ளை தயாபரன் (வளர்மதிவாசா ஆனைக்கோட்டை) | 200000.00 |
| பிரன்சிஸ் கரிசன் (BBC) | 500 Dollar |

# ஆங்கிலப் பயிற்சி நெறி கிளிநொச்சிக்கு மாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா ஜி.ரி.இசற் பணிமனையில் இன்று நடைபெறவிருந்த ஆங்கிலப் போதனாசிரியர்கட்கான "ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஆங்கில பயிற்சி நெறி" இன்று கிளிநொச்சி ஜி.ரி.இசற் பணிமனையில் நடைபெறவுள்ளதென நிறுவன நிர்வாக உத்தியோகஸ்தர் சு.தர்மரத்தினம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் திட்டமிட்டவகையில் 24ஆம், 25ஆம் திகதிகளில் வலய நிலையங்களில் பயிற்சிகள் நடைபெற்று 26 ஆம் திகதியன்று பயிற்சியாளர்களுக்கு ஜி.ரி.இசற் பணிமனையில் வைத்து சான்றிதழ்களும், கொடுப்பனவுகளும் வழங்கப்படுமெனத் தெரிவித்துள்ளார். (சோ)

## மருத்துவ நூலை பெறலாம்

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட வைத்திய சாலையில் இயங்கிவரும் மருத்துவ சங்கத்தின்ஆதரவுடன் வெளியிடப்பெற்ற "நாட்பட்ட சிறு நீரக செயலிழப்பிற்குள்ளான நோயாளர்களுக்கு சில ஆலோ சனைகள் என்ற தலைப்பிலான நூலும்" ஏனைய மருத்துவக் குறிப்புக்களும் கிளி.மாவட்டவைத்திய சாலையில் இயங்கி வரும் கிளி. மருத்துவ சங்கத்தில் உள்ளது. தேவையானவர்கள் இதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மருத்துவசங்கத்தினர் அறியத் தருகின்றனர். (சோ)

# ௨௦௦௬ஆம் ஆண்டு இறுதிவரை இலங்கையில் அமெரிக்கப் படைகள் நிலை கொண்டிருக்கும்

## ஏஜென்சிச் செய்தியொன்று தெரிவிப்பு

**ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், அழிந்து போயுள்ள உட்கட்டுமானங்களை மீளக்கட்டியெழுப்பும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் உதவி புரியவென வந்துள்ள அமெரிக்கப் படையினர் அடுத்த வருட இறுதிவரை சிறிலங்காவில் நிலைகொண்டிருப்பர் என்று அரச உயா வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித் துள்ளது.**

நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு உதவிபுரியவென 1,657 அமெரிக்கக் படையினர் உட்பட 2,517 வெளிநாட்டுப் படையினர் சிறிலங்காவில் தற்போது உள்ளனர். காலி, கட்டுநாயக்க விமான நிலையம், யாழ்ப்பாணம் உட்பட சில இடங்களில் அமெரிக்கப்படையினர் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 39 பேர் மருத்துவர்கள் 676 பேர் கேகாலைக் கடலில் தரித்துள்ள அமெரிக்காவின் தலுத் என்றகப்பலின் சிப்பந்திகள் ஆவர். 317 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்திலும், 221 பேர் கொழும்பிலும், 404 பேர் காலியிலும், 39 பேர் யாழ்ப்பாணத்திலும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கேகாலைக் கடலில் தரித்துள்ள அமெரிக்க கப்பலில் சி.எச்.46 ஈ உலங்கு வானூர்தி நான்கும். 180 தொன் சரக்கை தரையில் ஏற்றிச்செல்லக்கூடிய பார ஊர்தி ஒன்றும் மற்றும் பொறியியல் தளபாடங்களும் உள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. சிறிலங்காவுக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜதந்திரிகள் பலரும் தமது நாட்டுப் படைகள் இங்கு பணி முடிந்ததும் நாட்டுக்குத் திரும்பிவிடும் என்று தெரிவித்திருந்தனர். அதாவது, இங்கு மீள்கட்டுமானம் மற்றும் இயல்புநிலையை மீள ஏற்படுத்தும் பணிகளை முழுமையாகச் செய்துமுடிக்கும் வரை, கிட்டத் தட்ட அடுத்தவருட இறுதிவரை அமெரிக்கப்படைகள் இங்கு நிலை கொள்ளும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# மன்னாரில் நில நடுக்கமா? அரச அதிபர் விசாரணை

மன்னாரில் நேற்று முன்தினமிரவு நடந்ததாகத் தெரிவிக்கப்படும் நிலஅதிர்வு அச்சத்தால் முத்தரிப்புத்துறையிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.அங்கு இடம்பெற்ற சம்பவம் குறித்து மேலும் தகவல்கள் கிடைத்துள்ளன.

நிலநடுக்க அனுபவம் இந்த மக்களுக்கு இல்லாத காரணத்தால் நிலநடுக்கம் பற்றி உண்மையில் அது நிலநடுக்கம்தானா என்பது உறுதிப்படுத்தப்பட முடியவில்லை.நேற்றுமுன்தினம் மாலை மன்னார் முத்தரிப்புத்துறையில் கடுமையாக மழைபெய்துள்ளது. அதன் பின் மாலை 5மணியளவில் அப்பகுதியில் சுமார் 300 மீற்றர் தூரத்துக்கு கடல் வற்றிக் காணப்பட்டது.நேற்றுமுன்தினமிரவு 10மணியளவில் முத்தரிப்புத்துறையில் கத்தோலிக்க தேவாலயம் அருகில் 5ஏக்கர் நிலப்பரப்பில் இருந்த 9வீடுகள் மிதமாக அதிர்ந்துள்ளன.இந்த அதிர்வு மக்களால் பெரிதாக உணரப்படவில்லை.ஆனால் 9 வீடுகளின் தரைகள் வெடித்துள்ளன.சுவர்கள் வெடித்துள்ளன.15 நிமிடநேரம் இனம்புரியாத ஒரு அதிர்நிலையைத் தாம் உணர்ந்ததாக மக்கள் தெரிவித்துள்ளனர்.இதன் பின்னர் அங்கிருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அப்பகுதி மக்கள் பரியாரிகண்டல்,மருதமடு ஆகிய கிராமங்களுக்குச் சென்றுள்ளனர்.அப்பகுதியின் கடலில் இப்போதைய காலத்தில் கடல் பெருக்கு இருப்பதாகவும் ஆனால் வழமைக்கு மாறாக கடல்மட்டம் குறைவாகவே இருப்பதாகவும். அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.நேற்றுக் காலை நிலைமையை அவதானிப்பதற்காக தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் அரச அதிபர் வே.விசுவலிங்கம் ஆகியோர் முத்தரிப்புத்துறைக்குச் சென்றுள்ளனர்.அங்கு நிலைமைகளைத் தாம் பார்த்துள்ளதாகவும் நிபுணர்களின் வரவின் பின்னரே உண்மை நிலைமையை உறுதிப்படுத்தமுடியும் எனவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

# திருமலை வீரநகர் பிரதேச மக்கள் நிவாரணம் வழங்கக் கோரி வீதிமறியல்

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை வீரநகர் பிரதேச மக்கள் தமக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனக்கோரி நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணிக்கு வீதி மறியல் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

வீதிமறியல் போராட்டத்தில் இப்பிரதேசத்தில் வாழும் பாதிக்கப்பட்ட சுமார் 130 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பங்கு கொண்டனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என இவர்கள் ஏகாம்பரம் வீதியில் குறுக்காக அமர்ந்து தமது போராட்டத்தை மேற் கொண்டனர். ஆழிப்பேரலை யினால் பாதிக்கப்பட்ட இவர்கள் அகதிகளாக ராஜகீய வித்தியாலோக தேசியப்பாடசாலையில் தஞ்சம் அடைந்திருந்தனர். பாடசாலைகள் மீள முதலாம் தவணைக்காகத் திறக்கப்பட வேண்டியிருப்பதால் இங்கிருந்து அவர்கள் வெளியேறினர். இவர்களில் சிலர் உறவினர் வீடுகளிலும், சிலர் கூடாரங்களிலும் தங்கியிருக்கின்றனர். கூடாரங்களில் தங்கியிருக்கும் 40 குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றன. உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்போருக்கு கிராம சேவையாளர் நிவாரணம் வழங்குவதில்லை எனக் காரணம் காட்டியே இப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அவ்விடத்திற்கு வந்த திருகோணமலை பட்டணமும் சூழலும் மேலதிக பிரதேச செயலாளர் திருமதி ச.ஜலதீபன் பாதிக்கப்பட்ட சகலருக்கும் நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகவும், கிராம சேவையாளருடனான முரண்பாடுகளின் போது தீர்வுக்காக எங்[illegible] வந்து முறையிட்டு தீர்வு க[illegible]பற்றுக் கொள்வதை விடுத்து [illegible]தியினை மறித்து போராட்டம் நடத்துவதில் அர்த்தம் இல்லை எனத் தெரிவித்தார். இவ் ஆர்ப் பாட்டத்தில் தமிழ் - சிங்கள குடும்பங்களைச் சேர்ந்தோர் ஈடுபட்டிருந்தனர்.இதேவேளை திருக்கடலூர் பகுதி மக்களும் தமக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனக்கோரி கடந்த வியாழக் கிழமை இவ்வாறான போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தனர்.

# படகு மூலம் நாடு திரும்ப முற்பட்ட ௨௨ பேர் பாம்பன் பொலிசாரால் கைது

(சென்னை)

தமிழகத்திலிருந்து படகு மூலம் அனுமதியின்றி இலங்கைக்குத் திரும்பமுற்பட்ட இலங்கை அகதிகள் இருபத்து ரெண்டு பேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

அகதியாக இலங்கையிலிருந்து வெளியேறிய தமிழர்கள் மீண்டும் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்புகின்றனர். இந்நிலையில் தமிழகத்திலுள்ள அகதிகள் இலங்கைக்கு படகு மூலம் தப்பிச் செல்கின்றனர். இதைத் தடுக்க தமிழகப் பொலிசார் இரவு ரோந்துப் பணியைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இதைத் தொடர்ந்து கடந்த வியாழக் கிழமை நள்ளிரவில் பாம்பன் பொலிசார் குந்துகால் கடற்கரையில் ரோந்து சென்றனர். அப்போது இருளில் நின்று கொண்டிருந்த குழுஒன்று பொலிசாரைக் கண்டதும் தப்பியோட முயன்றனர் இதனைப் பார்த்த பொலிசார் அவர்களை பிடித்து விசா ரணை நடத்தினர் . அவர்கள் இலங்கை யாழ்ப்பாணம், கிளிநொச்சியைச் சேர்ந்த 14 ஆண்களும், 8பெண்களும் ஆவார்கள்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அகதியாக தமிழகத்திற்கு வந்த இவர்கள் கரூர், கும்மிடிப்பூண்டி, தாளையூத்து ஆகிய பகுதிகளில் தங்கவைக்கப்பட்டனர். இந்நிலையில் மீண்டும் இலங்கைக்கு செல்வதற்காக முகவர்களின் உதவியுடன் படகுகளில் பாம்பன் கடற்கரையில் இருந்து செல்ல முயன்றதாகத் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து அகதிகள் 22 பேரையும் பாம்பன் காவல் நிலை யத்தில் வைத்து தொடர்ந்து விசாரணைகள் நடத்தி வருகின்றனர்.

பிடிபட்ட அகதிகளுக்குள் கடந்த 2003 ஆம் ஆண்டில் கொழும்பு சிங்கள இனத்தைச் சேர்ந்த அஜித் பிரிஷ் என்பவர் பாஸ்போர்ட்டில் தமிழகத்திற்கு வந்து மீண்டும் இலங்கைக்கு செல்லாமல் ஒழித் திருந்துள்ளார். இந்த சிங்கள வாலிபரைப் பொலிசார் சிறையில் அடைத்துள்ளனர்.

# நாட்டைக் கட்டி எழுப்பும் பணியில் எதிர்க்கட்சி அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும்

## -மல்வத்துபீட மகாநாயக்கர் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டைக்கட்டியெழுப்பும் பணியில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு எதிர்க்கட்சித் தலைவரை மல்வத்தப்பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய திக்கட்டுவாவே சிறிசித்தாத்த சுமங்கலதேரர் கேட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க சங்கைக்குரிய தேரரை நேற்று முன்தினம் காலை சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அனர்த்தத்தின்போது சேதமடைந்த ஆலயங்களைப் புனரமைப்பது மற்றும் விடுதலைப்புலிகளுடன் உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதன் அவசியத்தையும் சங்கைக்குரிய தேரர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டைக்கட்டியெழுப்பும் முயற்சியில் சனாதிபதிக்கு தமது கட்சி முழு அளவில் ஆதரவு வழங்குமென்றும் தெரிவித்த ரணில்விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளுக்குச் சனாதிபதி சந்திரிகா சாதகமான பதிலை வழங்குவார் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# யாழ்.றோட்டறக் கழகத்தால் நடாத்தப்பட்ட நுண்ணறிவு, பொது அறிவுதேடல் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள பாடசாலை மாணவரிடையில் நடாத்தப்பட்ட தேடல் பரீட்சை முடிவுகள். முதல் 10 இடங்களைப் பெறுவோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

1ஆம் இடம் யுவத்தீவா சிறீஸ்கந்தராஜா-கிளி.மத்தியகல்லூரி, 2ஆம் இடம் தாட்ஷாயணி வீரகத்தி வட.மத்தியமகளிர் கல்லூரி, 3ஆம் இடம் சோபனா குலநாயகம் யா.வேம்படி மகளிர் உ.த.பா, 4ஆம் இடம் வி.சுதர்ஷினி யா.விக்கினேஸ்வரா கல்லூரி கரவெட்டி, 5ஆம் இடம் இ.கௌசல்யா யா.மெதடிஸ் மகளிர் பாடசாலை, 6ஆம் இடம் செல்வகுமார் பிருத்விராஜ் யா.ஹாட்லிக் கல்லூரி, 7ஆம் இடம் ச.குகப்பிரியா யா.சாவகச்சேரி இந்துக்கல்லூரி, 8ஆம் இடம் ப.மயூரி யா.பெரியபுலம் மகாவித்தியாலயம், 9 ஆம் இடம் சி.வரலக்ஸ்மன் யா.மானிப்பாய் இந்துக்கல்லூரி, 10ஆம் இடம் த.வினோதினி கிளி.திருவையாறு மகாவித்தியாலயம்.

சிறப்புப் பரிசில் பெறுவோர் (செஞ்சோலை சிறுவர் இல்ல மாணவர்கள்) ச.சந்திரிக்கா கிளி.மகாவித்தியாலயம், இ.பகீரதி கிளி.மகாவித்தியாலயம், ச.ரேணுகா கிளி.மத்தியகல்லூரி, க.நிவோஜினி கிளி.மகாவித்தியாலயம், இ.சாளினி கிளி.மத்தியகல்லூரி, மை. நிரோஜினி கிளி.மத்திய கல்லூரி, செ.தயாளினி கிளி.புனித திரேசா பெண்கள் கல்லூரி.

மேற்படி மாணவர்களிற்கும், பாடசாலைகளிற்கும் பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று பி.ப 3.30 மணியளவில் இல.361, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கழக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## -அனர்த்த நிவாரண ஒருங்கிணைப்பு செயலணி ஊடாக-

# சுனாமியால் பெற்றோரை இழந்த சிறார்கள் நலன்காக்க "யுனிசெப்" நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய "சுனாமி" கடற்பேரனர்த்தங்களால் தமது பெற்றோரை இழந்த சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்க ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமி அனர்த்தங்களால் உறவிழந்து நிர்க்கதியாக்கப்பட்ட சிறுவர்களைத் தத்தெடுப்பதாகக் கூறிப் பலரும் முன்வந்துள்ளனர். எனினும் தத்தெடுக்கப்படும் சிறுவர்கள் எதிர்காலத்தில் தத்தெடுப்போரால் துஷ்பிரயோகங்கள் செய்யக்கூடிய அபாயகரமான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இதனைக் கவனத்தில் கொணடே யுனிசெப் நிறுவனம் உறவிழந்த சிறுவர்களைத் தத்தெடுப்பது குறித்துக் கடுமையான சிறுவர் உரிமை பேணும் நடைமுறைகளை அமுற்படுத்தத் திட்டமிட்டு வருகிறது. இதற்கான நடவடிக்கைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அனர்த்த நிவாரண ஒருங்கிணைப்பு செயலணியூடாக மேற்கொண்டு வருகிறது.

தென்பகுதியில் அகதிமுகாம்களில் தங்கியுள்ள பெற்றோர்களையிழந்த சிறுவர் , சிறுமிகளை சிலர் கடத்திச் சென்று வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தியதோடு பாலியல்துஷ்பிரயோகங்களிலும் ஈடுபட்டிருந்த சம்பவங்கள் நடைபெற்றது தெரிந்ததே. (33)

# சொத்துக்குவிப்பு வழக்கிற்குமுன் அவசர சட்டசபைக் கலைப்பு?

தமிழக சட்டசபைத் தேர்தல் 2006 இற்கு முன்பே நடைபெறும் போலுள்ளது. அதுவும் எதிர்வரும் மேமாதம் சட்டசபைத் தேர்தலை தரிசிக்கலாம் என்றுதான் நம்பப் படுகின்றது. இதற்குக் காரணம் கர்நாடக மாநிலத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயல லிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைகள் ஆரம்பமாக உள்ளதே அன்றி வேறில்லை.

எனவே சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பு வெளிவருவதற்கு முன்னரே தேர் தலை நடத்தி முடித்துவிடுவதில் அவர் தீவிரம் காட்ட ஆரம்பித்துமுள்ளார் என்றே நம்பப் படுகின்றது.

அதாவது சொத்துக் குவிப்பின் தீர்ப்பு சாதகமா... பாதகமா... என்பதற்கு முன்பே ஆட்சிக்கதிரையினை மீண்டும் பிடித்துவிட வேண்டும் என்பது தான் அவரது பேரவா வாகவுள்ளது. அப்போது தான் சொத்துக் குவிப்பு வழக்குக் காலம் காலமாக நிலு வையில் இருக்கும், அவரும் காலம் கால மாக முதலமைச்சர் கதிரையில் இருக்க முடியும் என்பதே மறைமுகமான உண்மை கள் என்றால் தவறில்லை.

அதனால் தான், கர்நாடகத்தில் நாளை வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகும் வரவு செலவுத் திட்டகூட்டத் தொடர் முடிவடைந்த கையோடு, சட்டசபையைக் கலைத்து விடுவதாகவும், சூட்டோடு சூடாக தமிழக சட்டசபைத் தேர்தலை நடத்தி, வெற்றி வாகை சூட வேண்டும் என்பதே தமிழக முதலமைச்சரின் முடிவும் கனவுமாக இருக் கின்றது.

இதேநேரம் வரவு செலவு கூட்டத் தொடர் முடிவடையும் வரை சொத்துக் குவிப்பு வழக்கை ஆரம்பிக்க தடை


ஜெயலலிதா

குவிப்பு வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றுமாறு மனுத்தாக்கல் செய்திருந்தார்.

ஆனால் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவோ, தன்மீதான வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றுவது மிகப் பெரிய பாவச் செயல் என்பது போல உச்ச நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

ஆனால் உச்ச நீதிமன்றம் 2003 டிசம்பர் 18 ஆம் திகதி சொத்துக் குவிப்பு வழக்கை கர்நாடக மாநிலத்திற்கு மாற்றம் செய்து தீர்ப் பளித்து விட்டது.

இதேபோன்று முதலமைச்சர் லண்டனில் ஹோட்டல் வாங்கியதாக தொடரப பட்ட வழக்கும் கூட கர்நாடக தனி நீதி மன்றத்திற்கு மாற்றப் பட்டதையும் முதல மைச்சர் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

மீண்டும் சொத்துக்

ஆனால் ஆளும் அ.தி.மு.க சட்டசபையி னைக்கலைப் பதற்கு சிபார்சு செய்யும் போது ஆளுநர் சட்டசபையினைக் கலைத் தேதான் ஆக வேண்டும்.

இதேவேளை வரவுசெலவுக் கூட்டத் தொடர் முடிவடையும்வரை சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைகளுக்கு உச்ச நீதிமன்றம் தடைவிதிக்கப்போவதில்லை என்றே எதிர்வு கூறப்படுகின்றது.

இதனால் கர்நாடகத்தில் வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும்போது தமிழகத்தில் தேர்தல் நடவடிக்கைகளில் அ.தி.மு.க ஈடுபடுவது மிகவும் சுலபமான காரியமல்ல.

ஏனெனில் நடக்கும் விசாரணை முடிவுகள் சட்ட மன்றத்தேர்தல்நடவடிக்கை களை நிச்சயம் பாதிக்காமல் இருக்க மாட்டாது. கர்நாடகம்,தமிழகம் என்று ஜெயலலிதா அலையவே நேரம்போ தாமல் இருக்கும் போது தேர்தல் நடவடிக்கைகளில் முழு மூச்சாக ஈடுபடு வது மிகவும் கடினமானதொன்று.

எனவே மே மாதம்சட்டசபைத் தேர்தலை நடத்த எத்தனிப்பது யானை தன் கை யால் மண்ணள்ளிப்போடுவதற்கு ஒப்பா னது.

என்ற தகவல் வெளிவந்தவுடனேயே, கோட் டையில் அவசர மாநாடு தமிழக முதல மைச்சர் தலைமையில் கூடிவிட்டது.

சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பு பாதகமாக அமைந்து விடுமானால் சட்ட சபைத் தேர்தலுக்கு முகம் கொடுக்க முடி யாது போய்விடும் எனும் பரிதவிப்புக் காரணமாகவே தேர்தலை எதிர்வரும் மேமாதம் நடத்தினால் என்ன...? என்று ஆலோசிக்கப்பட்டுள்ளதாக தெரியவந் துள்ளன.

இந்த வகையில் எதிர்வரும் 31 ஆம் திகதி சட்டசபை கூடவுள்ளது. ஆளுநர் உரை கூட்டத்தொடர் முடிவடைவது மட்டும் தான் தாமதம் 10 நாட்களின் பின்னர் வரவு செல வுத் திட்டத்தை அரசு சமர்ப்பிக்கத் திட்ட மிட்டுள்ளது.

இந்த வரவு செலவுத்திட்டம் வழமைபோன்றது அல்லவாம் முழுக்க முழுக்க மக்கள் மனதைக் குளிர வைப்பதாகவே இருக்கும் என்று எதிர்பார்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

அந்த வகையில் புதிய புதிய சலுகை கள்: புதிய புதிய நலத்திட்டங்கள், வரி விதிப்புக்கள் எல்லாம் வாபஸ் என்று தமிழக மக்களை சலுகைக்கடலில் மூழ்க டிப்பதே இந்த வரவு செலவுத்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக இருக்கப் போகின் றது போல் உள்ளது.

விதிக்கக் கோரியும் தமிழக முதலமைச்சர் உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய் துள்ளார்.

1991-1996 வரை தமிழக முதலமைச் சராக ஜெயலலிதா பதவி வகித்த ஆறு ஆண்டுகளில் ரூ.66 கோடி பெறுமதியான சொத்துக்களை வருமானத்திற்கு மேலதிக மாக சேர்த்துள்ளதாகவே வழக்குத் தொட ரப்பட்டது.

தமிழக முதலமைச்சருக்கு உடந்தை யாக அவரது வளர்ப்பு மகன் தினகரன், தோழி சசிகலா, உட்பட நான்கு பேரும் கூட இந்த வழக்குடன் தொடர்புபட்டுள் ளனர்.

ஆனால் இதுவரை காலமும் சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்புத்தான் எட்டப்பட வில்லை. ஏனெனில் வழக்கு தமிழகத்தில் நடைபெற்றமையே மிகப் பெரிதான காரணம் என்று தான் கூற வேண்டும்.

தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பதவி வகிக்கையில் அவர் மீதான வழக்கை நடத்துவது என்பது மிக இலகு வான காரியமாக வழக்கைத் தொடர்ந்த சுப்பிரமணிய சுவாமி யால் முடியவில்லை எனலாம். ஜெயலலிதாவுக்கு எதிரான சாட்சி யங்கள் எல்லாம் நாளுக்கு நாள் பல்டியடிக்க ஆரம்பித்து விட்டன.

இதனால் தி.மு.க பொதுச் செயலர் அன்பழகன் உச்ச நீதிமன்றத்தில் சொத்துக் குவிப்பு வழக்கு ஹோட்டல் வாங்கிய வழக்கு இரண்டையும் கர்நாடக மாநிலத்தில் நடத்த வேண்டாம் என்று ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் மனுத்தர்க்கல் செய்தார்.


சசிகலா

இந்த மனு மீதான விசாரணை நீண்டு கொண்டே சென்றது. தமிழக முதலமைச்சர் புதிது புதிதாக காரணங் களை இனங் காட்டிக் கொண்டே வந்தமை யினால் மனு மீதான விசாரணை இதுவரை காலமும் முடியாமல் இருந்து வந்தது.

இதனால் சாவகாசமாக சொத்துக் குவிப்பு வழக்கை எதிர்நோக்கலாம் என்று முதலமைச்சர் ஆறுதலடைந்திருந்த நேரத்தில் திடீரென்று நாளை பெங்களூரில சொத்துக்குவிப்பு வழக்கு ஆரம்பமாக இருப்பது பேரதிர்ச்சியை தமிழக முதல மைச்சருக்கு ஏற்படுத்தாமல் இருக்க வாய்ப்பில்லை.

அதிர்வுகளுக்கு மத்தியிலும் சட்ட சபை யைக் கலைத்து விடவும் தேர்தலை நடத்து மாறும் அவருக்கு வேப்பிலை அடிக்கப் பட்டதாகக் கூறப்படுகின்றது. இல்லை யேல் சட்ட சபைத் தேர்தலுக்கு முகம் கொடுப்பது இயலாதகாரியம் என்றும் அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள் ளதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை இவையனைத்திற்கு மிடையே 2006 சட்ட மன்றத்தேர்தலை நோக்கிப் படிப்படியாக நகரும் தமிழக தி.மு.க. கூட்டணி ,திடீரென்று எதிர்வரும் மே மாதம் சட்ட சபைத் தேர்தலை எப்படி சமாளிக்கபோகின்றது என்பது மிகப்பெரிய வினா. இதேவேளை சட்டமன்ற அதிகாரம் தமிழக ஆளுநருக்கு உண்டு.எனவே சட்ட சபையைக் கலைப்பதற்கு முதலமைச்சர் முடிவு செய்தாலும் கூட ஆளுநர் உடன் படுவாரா என்பதும் சந்தேகம்தான்.

ஆனாலும் சுனாமிபேரனர்த்தம் தன்னை மீள வைக்கும் என்பது தமிழக முதல மைச்சரின் திடமான நம்பிக்கை. அதனால் தான் அவசரமாக சட்டமன்றத்தேர்தலை நடத்திவிடுவதில் அவர் குறியாக இருப் பதாகக் கூறப்படுகின்றது. இதேபோன்று சொத்துக் குவிப்பு வழக்கை கர்நாடக மாநிலம் நடத்தி முடித்து விடுவதிலும் மிகவும் குறியாக இருக்கின்றது. அதுவும்இரண்டு மாத காலத்தினுள் முடித்து விடுவது என்பது மிகவும் வேக மான பணியாகவே இருக்கும் இத்தகை யதோர் நிலையில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சட்டசபையைக் கலைப்பது என்பது பொருத்தப்பாடுடையதொன்றா... என்பதும் மே மாதம் தேர்தலை நடத்தி விட முனைப்புக் காட்டுவது பொருத் தமானதா... என்பதும் சொத்துக்குவிப்பு வழக்கில் தான் தங்கியுள்ளது.

அதாவது கர்நாடக மாநிலத்தில் சொத்துக் குவிப்பு வழக்கு நாளை தொடங் குமா... தொடராதா... என்பதே அதனை நிர்ணயிக்கப் போகின்றது என்றால் மிகையாகாது.

அ.கலைவாணி

## மன்னாரில் திருட்டுச் சம்பவங்கள் மீண்டும் அதிகரிப்பு

(மன்னார்)

மன்னாரில் தற்சமயம் திருடர்களின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது. சில தினங்களுக்கு முன் மன்னாரில் குருமடவீதியில் காலை வேளை ஒரு வீட்டில் பகல் உணவுகளை விற்பனை செய்யும் ஒரு பெண்ணிடம் பிச்சை கேட்பது போல் சென்று 30வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் அப் பெண்ணிடம் இருந்த 9 ஆயிரம் ரூபாவைத் திருடிய சமயம் அப்பெண் அவரைக்கையும் மெய்யுமாகப் பிடித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார். இதேசமயம் முருங்கன் ஜீவ உதயம் பண்ணையிலும் அங்கு வசித்த வயோதிபர் ஒருவரின் வானொலிப் பெட்டியைத் திருடிய 14வயதை உடைய சிறுவன் ஒருவன் பிடிக்கப்பட்டான். இவர்கள் இருவர் மீதும் மன்னார் பொலிசாரினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (18)

# மூர்க்கமாகக் குமுறி எழுந்து வந்த அலையிலும் விடாப்பிடியாக நின்று பாலம் அமைத்தோம்

**தமிழீழக் காவல்துறையின்குற்றப் புலனாய்வுப் பிரிவுக் கண்காணிப்பாளர் கானகனிடம் மீட்பு நடவழக்கையில் எதிர்கொண்ட சவால்கள் பற்றியும், கண்ட காட்சிகள் பற்றியும் கேட்ட போது...**

அ.லோகீசன்

பகுதி-5





முல்லைத்தீவுக்குள் கடல் பெருகி வருவதாக எங்களுக்கு 8.45 மணிக்குத் தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்தவுடன் நாங்கள் எங்களுக்குரிய வாகனங்களில் உடனடியாகவே புறப்பட்டு விட்டோம். கடல் பெருக்கெடுப்பது என்பதை நாங்கள் ஒருகாலமும் கண்டதில்லை. அது எப்படி நிகழ்ந்திருக்கும் என்பதை கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.சரி என்ன சம்பவம் என்பதை நேரில் பார்ப்போம் என்று எங்களது வாகன அணி 30 உறுப்பினர்களுடன் வட்டுவாகல் நோக்கி வேகமாகப் புறப்பட்டது. முள்ளிவாய்க்கால் பகுதியில் எங்கள் வாகனத் தொடா போய்க்கொண்டிருந்தபோது தான் பெரும் கூட்டமாக மக்கள் இடம்பெயர்ந்து வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் எங்களை 'கடல் வருகுது போகாதேங்கோ' என்று கூறி மறித்தார்கள். எனினும் நாங்கள் வட்டுவாகல் பாலத்தைப் போய்ச்சேர்ந்தோம். பாலம் எங்கிருக்கிறது என்பதே தெரியவில்லை. அவ்வளவுக்கு கடல் வந்து பாலத்தை ஆக்கிரமித்திருந்தது.

கடல் வருவதும் போவதுமாக தொடர்ந்துகொண்டே இருந்தது. முல்லைத்தீவின் உள்ளே இருந்து வட்டுவாகல் விசாரணை அதிகாரி சிவநேசன் அந்தப் பகுதி நிலவரங்களை அறிவித்துக்கொண்டிருந்தார். அதாவது தண்ணீர் பெருமளவில் நிற்கிறது எந்தப் பகுதியாலும் மீண்டுவர முடியாமல் இருக்கிறது. தப்பிய மக்கள் இங்கிருக்கிற மணற்திட்டியில் ஏறிநிற்கின்றார்கள். என்ற தகவல்களை எங்களுக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தார்.

இப்படியே நாங்கள் கதைத்துக்கொண்டு உள்ளுக்குள் போக வெளிக்கிட கறுப்பாக ஒரு பெரிய அலை எழுந்து வந்து பாலத்தின் மேல் அடித்துக்கொண்டுபோனது. அடித்த தண்ணீர் எங்கள் கால்களில் பட்டு சுட்டது. இப்படியே 'ஓரளவு உயரத் தில் அலை வருவதும் போவது மாய் இருந்தது. நாங்கள் எப்படி யாவதும் உள்ளுக்க போகவேணும. காயக்காரரை வெளியால கொண்டு வரவேணும் என்ற நோக்கில் உள்ளே போவதற்கான முயற்சியில் இறங்கினோம். நாங்கள் போவதும் அலைவரத் திரும்பி வருவதுமாக ஆறு தடவைகள் போய்வந்தோம். பாலத்தில் நின்று கடலைப்பார்க்கின்றபோது தொடுவாய் வழமையைவிட அகலமாகக் காணப்பட்டது. அதனால் தூரத்தில் அலைவருவது தடையின்றித் தெரிந்தது. ஆனால் நாங்கள் திரும்புவோம் எண்டு முடிவெடுப்பதற்கிடையில் வேகமாக அலை வந்து அடித்துக்கொண்டு போனது.

உள்ளுக்கிருந்து தகவல் வருகிறது. நிறையப்பேர் காயப்பட்டும் செத்தும் போட்டினம். மரங்களில் எல்லாம் தொங்கிக்கொண்டிருக்கினம். எப்படியாவது அவையளக் காப்பற்ற ஒரு வழி தேவை என்ற தகவல் வந்தது. உடனடியாக நாங்கள் தற்துணிவோடு பாலத்தில் நடக்க ஆரம்பித்தோம். பாலத்தில் மரங்கள், கட்டைகள், கல்லுகள் எல்லாம் வந்து கிடக்கின்றன. முதல் மூன்று தடவைகள் வந்தது போல அலை இன்னும் ஒரு தடவை வந்திருந்தால் பாலத்தைத் தூக்கிப் பிரட்டியிருக்கும். பாலத்தின் இந்தக் கரையிலிருந்து நாங்களும் சிக்கியிருந்த எங்கள் உறுப்பினர்கள் அந்தக் கரையிலிருந்தும் ஒரே நேரத்தில் பாலத்தைச் சீர்படுத்தும் பணியில் இறங்கினோம் வேகமாக சீர்செய்து கொண்டிருந்தோம். பெரிய பனைமரங்கள் எல்லாம் சும்மா வெறும்தடி மாதிரி மிதந்து கொண்டு வந்தன. ஒருவாறு சீர்ப்படுத்திக் கொண்டு போனபோது பாலம் இரண்டு இடங்களில் ஐந்தடி அகலத்தில் உடைந்திருந்தது. உடைந்திருந்த அந்த இடத்தை நிரப்புவதற்காக உடனடியாகவே மண்மூட்டைகளைக் கட்டிப்போட்டு நிரவிக் கொண்டிருந்த போது ஒரு அலை வேகமாக வந்து கொண்டிருந்தது. நாங்கள் கரைக்கு ஓடிவந்தோம். போடப்பட்ட மண் மூட்டைகள் எங்கே என்று தெரியவில்லை. இரண்டாவது தடவையாகக் கல்லுகள், மண் மூட்டைகள் என்பவற்றைப் போட்டு மீண்டும் திருத்த அலை பிறகும் வந்து அடித்துக்கொண்டு போனது.

இப்படி ஐந்து ஆறு தடவைக்கு மேலாக நாங்கள் பாலத்தைப் போடுவதும் அலை அடித்து உடைப்பதுமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. இறுதியில் ஒருவாறு பாலம்போட்டுவிட்டோம். பாலம் போடும்போது நாங்கள் ஒரு ஆபத்தான நிலையில் முறட்டுத்துணிவுடன் பாலத்தின் நடுவில் நின்றுதான் திருத்தம் செய்தோம். அலை அடிக்குது. அங்காலையும் ஓட ஏலாது இங்காலையும் ஓட ஏலாது. ஒரு கட்டத்தில் அலை அடித்துவிட்டது. எங்களால் எதுவும் செய்யமுடியவில்லை. நடுவிலேயே நாங்கள் எல்லோரும் நின்றுவிட்டோம். எங்களையும் தாண்டி அலை போய்விட்டது.

இந்த நிலையில் எங்கள் கால்களைத் தட்டிக்கொண்டு ஏதோ பாலத்தின் மேலால் நந்திக்கடல் பக்கம் போனது என்னவென்று பார்த்தால் ஒரு அம்மாவின் சடலம். உடனேயே அதை எட்டிப்பிடித்துத் தூக்கி எடுத்துக் கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தோம். பாலத்தைத் தற்காலிகமாகச் செய்துவிட்டோம். அதனூடாக மதி என்ற துணைப்படை வீரர் உழவு இயந்திரத்தை புத்திசாதுரியமாக அடுத்தகரைக்குக் கொண்டு போய்விட்டார். அனர்த்தத்திற்குப் பிறகு முல்லைத்தீவுக்குப் போன முதலாவது மீட்பு வாகனம் இதுதான். தொடர்ந்தும் அலை அடித்துக்கொண்டு இருக்குது. நாங்கள் போட்ட பாலமும் கரைந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் நாங்கள் ஒரு பிக்கப் வாகனத்தை பாலத்துக்கு இஞ்சால வச்சு உழவு இயந் திரத்தில் வாற காயக்காரர மாத்தி ஏற்றிக்கொண்டு போனம். அதுவும் அலைவர பிக்கப் இஞ்சாலை கரைக்கும் உழவு இயந்திரத்தை அங்காலக்கரைக்கும் கொண்டு போறது.பின்னர் கொண்டோடிவந்து ஆக்கள மாத்தி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறது இப்படித்தான். கொஞ்சநேரம் எங்கள் வேலை நடைபெற்றது. காயக்காரர் எல்லாருமே தங்கள் உயிர்பிழைக்குமா? என்று உயிருக்காகப் போராடிக்கொண்டு தான் இருந்தார்கள். எங்களுக்கு எந்த வழியும் இல்லை. அவர்களைப புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம். சிறிது நேரத்தில் தமிழீழ மருத்துவப்பிரிவின் அம்பியூலன்ஸ் வண்டிகள் வந்து வட்டுவாகல் பாலத்தடியில் உடனடியாக முகாம் அமைத்து அவர்களுக்கு அவசர சிகிச்சைகளை வழங்கி வந்தனர். நாங்கள் காயக்காரரை மீட்கின்ற அதே வேளை ஏனைய வாகனங்கள் போகக் கூடியவாறு பாலத்தைச் சீர்படுத்திக்கொண்டும் இருந்தோம். ஒருவாறு அதுவும் நிறைவடைய எங்கள் பிக்கப் வாகனங்கள் ஒவ்வொன்றாக உள்ளே சென்றன. பாலத்தின் மேலுள்ள பாதையில் பாசிகள் அள்ளி வீசப்பட்டிருந்ததால் வாகனத்தைச் செலுத்த முடியாத நிலை காணப்பட்டது. வழுக்கிக் கொண்டு போனது. உள்ளே கொண்டு சென்ற வாகனங்களைப் பிரித்து அனுப்பினோம். வெள்ளத்துக்குள்ளால்தான் வாகனங்கள் மீட்பு நடவடிக்கைக்குப் போய்க் கொண்டிருந்தன.

எங்களைக் கண்டதும் தப்பியிருந்த எல்லோருக்கும் பெரும் சந்தோசம். "கைகுடுக்க வந்திட்டார்கள எனி" எங்களுக்குப் பிரச்சினையில்லை எங்களைக் காப்பாற்றுங்கோ" எண்டு கத்தினார்கள். ஆங்காங்கே கல்லுக்குள்ளையும் தண்ணீக்கையும் மரங்களிலேயும் ஆக சடலங்கள் பெருமளவில் கிடந்தன. எங்களது உறுப்பினர்கள் ஒவ்வொரு இடத்திலிருந்தும் 100 சடலம் வரை இருக்கு 150 சடலம் வரை இருக்கு, 200 சடலம்வரை இருக்கு எண்டு சொல்லிக் கொண்டே இருந்தார்கள். சில நொடிகளில் இப்படி நடந்திருக்குமா? நம்பவே முடியவில்லை. ஆனால் சம்பவங்கள் உண்மையாக இருந்தது. இந்நிலையில் தள அமைப்புப் பிரிவினரின் வாகனங்கள் உட்பட பெருமளவான வாகனங்கள் வந்து சேர்ந்துவிட்டன. அதனால் நாங்கள் காயமடைந்தவர்களைத் தேடி மீட்கின்ற நடவடிக்கையை மேற்கொண்டோம். இந்த நடவடிக்கையில் நாங்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது செல்வபுரம் பகுதியில் மணற்றிடலில் தேவாலயம் ஒன்று உள்ளது. அந்தத் தேவாலயத்தில் வயதுபோன ஐயா தனியே இருந்தார். அவருக்கு எண்பது வயதிருக்கும். "அலை வருகுது எண்டு கத்தினபடி எல்லாரும் ஓடினார்கள். நான் என்னமாதிரி அலை வருகுது எண்டு சிந்திப்பதற்குள் என்னைக கடல் உருட்டிக்கொண்டு வந்தது. நான் எப்படித் தப்பினேன் என்பது கூடத்தெரியவில்லை" என்றார்.

காயமடைந்தவர்கள், இறந்தவாகள்ஏன் உயிர் தப்பியவர்கள் கூடப்பலர் உடுப்புக்கள் இல்லாமல்தான் இருந்தார்கள். கடல் வந்த வேகத்தில் உடுப்புகள் எல்லாம் கிழிந்து கழண்டிருக்க வேணும். பெண்கள் பலரது சடலங்கள் "கொமாண்டோ" கம்பிகளுக்குள்ளும வேலிகளுக்குள்ளும், கூரைத் தகடுகளுக்குள்ளும் , பனை வடலிகளுக்குள்ளும் சிக்கிக்கிடந்தன. சிலர் அப்படி சிக்குண்டு கத்திக்கொண்டு கிடந்தார்கள். அவர்களில் சிலரது தலை முடியைக் கத்தியால் வெட்டி மீட்டோம். இவ்வாறு மீட்கப்பட்ட 270 இற்கும் அதிகமான காயமடைந்தவர்களை வட்டு வாகல் ஊடாகப் புதுக்குடியிருப் புக்கு அனுப்பினோம். அவர்கள் வட்டுவாகல் பாலத்தால் அடுத்த கரைக்குப் போக மாட்டோம் என்று பயந்து கத்தினார்கள். உடனே எங்களது உறுப்பினர்கள் பாலத்தின் இடையிடையே போய்நின்று கொண்டு "பிரச்சினையில்லை. நாங்கள் நிக்கிறம் நீங்கள் வாங்கோ" எண்டு சொன்னபிறகுதான் அவர் கள் வந்தார்கள். 10.30 மணிக்கிடை யில் பரவலான பார்வையில் இருந்த காயக்காரரை அகற்றி முடித்திருப்போம். அடுத்த கட்ட மாகச் சடலங்களையும், தப்பியவர்களையும் அகற்றுகின்ற பணியை மேற்கொண்டோம். சடலங்களின் மேல் கற்கள், குப்பைகள் அடைந்தும், மரங்களில் செருகுப்பட்டும். கட்டடங்களின் இடிபாடுகளுக்குள்ளும் பெருமளவான சடலங்கள் அலங்கோலமாக இருந்தன.

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்



செல்வபுரம் பகுதியால் நாங்கள் போய்க்கொண்டிருந்தோம். ஒரு முனகல்சத்தம் கேட்டுக கொண்டிருந்தது. அந்த வீடு இடிந்துபோய்விட்டது. வீட்டின் அலுமாரிகள்,ரீ.வி போன்ற பெருமளவான பொருட்கள் எல்லாம் அவரின மேல் விழுந்து நசிபட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு 20 வயது தான் வரும். இப்படியே அந்தப் பெடியனை மீட்டெடுத்து வைத்தியசாலைக்கு அனுப்பிப்போட்டுத் தொடர்ந்து தேடிக்கொண்டு போகேக்க ஒரு ஐயா மரத்துக்குக் கீழ இருந்து ஏதோ யோசிச்சுக்கொண்டிருந்தார்.

தொடரும்...

# வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த காவல்துறை தீவிர நடவடிக்கை

## -வீதிமுறைகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புப் பகுதியில் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

புதுக்குடியிருப்பில் கடந்த சில நாட்களாக வீதிவிபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதனை அடுத்தே தமிழீழ காவல்துறையினர் வீதிப் போக்குவரத்தில் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றனர்.

அந்தவகையில் 20.1.2005 அன்று பக்கம் பக்கமாக வீதியில் சென்றவர்கள் 65 பேர் வரை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இவர்களை நீதிமன்றம் கடுமையாக எச்சரித்து பின்னர் விடுதலை செய்தது.

இதேவேளையில் மறுநாளும் வீதி நடைமுறைகளை மீறிய பலர் கைது செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

புதுக்குடியிருப்பு காவல்துறையினரின் நடவடிக்கைக்கு மக்கள் மத்தியில் இருந்து நல்ல ஆதரவு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (08)

# பாதிக்கப்பட்ட மக்களின் விபரம் சேகரிப்பில் கிழக்கு பல்கலை

திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்களைச் சேகரிக்கும் பணியில் கிழக்கு பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகம், ராஜரட்டை பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஊழியர்களும் மாணவர்களும் ஈடுபட்டு வருகின்றனர். நான்கு தினங்கள் இவ்வாறான வேலைத்திட்டம் ஒன்றினைச் செய்வதற்கு திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றனர். நேற்று முன்தினம்நிலாவெளி, கோபாலபுரம், குச்சவெளி, போன்ற இடங்களில் இவர்கள் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் தனியாகச் சந்தித்து அவர்கள் பற்றிய விபரங்களை கேள்விக்கொத்து முறை மூலம் திரட்டினர். நேற்று கிண்ணியா பிரதேசத்திலும், இன்று மூதூர் பிரதேசத்திலும், நாளை திருகோணமலை பிரதேசத்திலும் இவ்வாறான தகவல் சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக திருகோணமலை வளாகத்தின் உயர் அலுவலகர் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தமது விபரங்களைத் தெரிவிப்பதன் மூலமாக அவர்களது பாதிப்புக்கள் பற்றியும், பிரதேசத்தின் பாதிப்புக்கள் பற்றியும் அறிந்து கொள்ள முடியும். சனாதிபதி செயலகத்தில் இருந்து வந்த அறிவுறுத்தலின் பிரகாரம் தாங்கள் இந் நடவடிக்கையில் ஈடுபடுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரதேச செயலக உப பணிமனையால் காணி உரிமைப்பத்திரம் வழங்கல்

## -சேவையைத் தொடர வலியுறுத்து

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரத்தில் இயங்கி வரும் கரைச்சிப் பிரதேச செயலக உப பணிமனையால் காணி உறுதியற்ற 25 பேரிற்கு 17.1.2005 அன்று காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கரைச்சிப்பிரதேச செயலக உப பணிமனையில் வைத்து ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம், கண்ணகைபுரம் பகுதிகளைச் சேர்ந்த 25 பேரிற்கே இக்காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், காணி உறுதியற்றவர்களிற்கான நடமாடும் சேவையும் அன்றைய தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கரைச்சிப்பிரதேச செயலகக்காணி உத்தியோகத்தர் ஸ்ரீரங்கநாதன், குடியேற்ற உத்தியோகத்தர்கள், சிவகுமார்,சதாசிவம் மற்றும் உபபணிமனைப் பொறுப்பு அலுவலர் மகேந்திரம், நிர்வாக சேவை உத்தியோகத்தர், காணிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் க்லந்து கொண்டனர்.

இதேவேளை இந்நடமாடும் சேவை ஒருநாள் மட்டுமே நடைபெற்றதால் புதிய காணிப்பதிவுகளை பல பொதுமக்கள் மேற்கொள்ளவில்லை என்றும் பிறிதொரு நாளில் இந் நடமாடும் சேவையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும் என பொதும்க்கள் தெரிவித்துள்ளனர். (15)

# உணவுப் பொருட்களை வழங்கினர்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வடமராட்சி நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளோரிற்கு நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் தலைமையில் ஆசிரியர் ,ஆசிரியைகள், மாணவ,மாணவிகள் நேரில் சென்று பாடசாலை உபகரணங்கள், மற்றும் உணவுப்பொருட்களைக் கையளித்துள்ளனர். (சு)


## பாடசாலை நூலகங்களுக்கான இலவச பாடப்புத்தக விநியோகம்

டிசம்பர் 26, 2004 இல் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை மாணவர்களுக்கு உதவுமுகமாக (தரம் 1 தொடக்கம் உயர் தரம் வரையான) பாடப்புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள், உசாத்துணை நூல்கள் போன்றவற்றை பாடசாலை நூலகங்களுக்கு இலவசமாக வழங்கவுள்ளோம். பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள் தங்களது பாடசாலையில் உள்ள தரங்களின் (வகுப்புகள்) விபரங்களை சனவரி 30,2005 இற்கு முன்னர் எமக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தினால் காலதாமதமின்றி விநியோகம் செய்யக்கூடியதாக இருக்கும்.

லங்கா புத்தகசாலை (தொலைபேசி-2341942) கொழும்பு-12

*தொடர்புகட்கு:- சிறிலங்கா புத்தகசாலை*
*234,கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்,*
*தொலைபேசி-021-2222573*

(சி.11182)


# சுனாமியால் கல்முனை தமிழ்ப் பிரதேசத்தில் 1,365பேர் உயிரிழப்பு; 144 பேரைக் காணவில்லை

(மட்டக்களப்பு)

ஆழிப்பேரலையினால் அம்பாறை மாவட்டம் கல்முனை தமிழ்ப் பிரதேசத்தில் 1,365 பேர் உயிரிழந்துள்ளார்கள். 144 பேர் காணாமற் போயுள்ளார்கள். 720 பேர் காயமடைந்துள்ளார்கள் என கல்முனை தமிழ்ப் பிரிவுப் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாண்டிருப்பு 502, கல்முனை 493, நீலாவணை 364, என 1,365 உயிரிழப்புகள் கிராம ரீதியாக இடம்பெற்றுள்ளன. காணாமற் போனவர்களைப் பொறுத்த வரை கல்முனை - 90, பாண்டிருப்பு 12, நீலாவணை 42 என அது பற்றிய விபரங்களும், கல்முனை 544, பாண்டிருப்பு 36, நீலாவணை 140 என காயமடைந்தவர்கள் விபரங்களும் வெளியாகியுள்ளது. கல்முனை 535, பாண்டிருப்பு 962, நீலாவணை 808 என்ற எண்ணிக்கையில் 2,305 வீடுகள் முற்றாகவும் முறையே 555, 261, 281 என்ற எண்ணிக்கையில் 1,097 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. கல்முனை சிறீ மாமாங்கேஸ்வரர் வித்தியாலயம்; பெரிய நீலாவணை சரஸ்வதி வித்தியாலயம், பாண்டிருப்பு சிறீ மகா விஸ்ணு வித்தியாலயம் ஆகியன தரைமட்டமாகியுள்ளன. கல்முனை மாமாங்கப்பிள்ளையார் ஆலயம்,பாண்டிருப்பு விஸ்ணு ஆலயம், கல்முனை விஸ்ணு ஆலயம், கல்முனை கண்ணகி ஆலயம், கல்முனை அன்னை வேளாங்கன்னி மாதா ஆலயம், கல்முனை அன்னை வேளாங்கன்னி ஆலயம், பெரிய நீலாவணைபிள்ளையார் ஆலயம், பாண்டிருப்பு காளிகோவில், கல்முனை குறுந்தையடி ஐயனார் கோவில், கல்முனை நாக தம்பிரான் கோவில், பாண்டிருப்பு அந்தோனியார் ஆலயம் ஆகியன முற்றாக சேதமடைந்துள்ளன.

# மைக்ரோ ரக கைத்துப்பாக்கியுடன் இளைஞர் ஏறாவூர் பொலிசாரால் கைது

செங்கலடி - பதுளை வீதி கொடுவாமடு இராணுவ முன்னணி காவல் நிலையப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இளைஞரொருவர் மைக்கிரோ ரக கைத்துப்பாக்கியுடன் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இவர் திருகோணமலையைச் சேர்ந்த கே.எம்.சேக்ஸ்பியர் என ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர். திருகோணமலையிலிருந்து வந்ததாகக் கூறப்படும் இவரது ஜக்கட்டிற்குள் இருந்து இவை மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டமேலதிக நீதிபதி எம்.எச். எம்.அஜ்மீர் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போது இவரை எதிர்வரும் 3ம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவை நீதிபதி பிறப்பித்தார்.

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஐந்து இளைஞர்கள் கைது

மட்டக்களப்பு நகரிலும் நகருக்கு வெளியேயும் இடம்பெற்ற சில குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 2 முஸ்லிம்கள் உட்பட 5 இளைஞர்கள் நேற்று முன்தினமிரவு பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு பேருந்து நிலையத்தின் முன்பாக வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினரால் நாவற் குடாவைச் சேர்ந்த துரைராஜசிங்கம் விஜயகுமார் என்ற இளைஞர் கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார். உந்துருளியில் பயணம் செய்த இவரை விசேட அதிரடிப் படையினர் சோதனையிட முற்பட்ட சமயம் இராணுவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறி இவர் தப்பிச் செல்ல முற்பட்டுள்ளார். இவர் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட போது பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்தனர் இவர் கொடுத்த தகவலின் பேரில், மேலும் 4பேர் மட்டக்களப்பு நகரப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். குறிப்பிட்ட நபர்கள் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

# சுனாமியால் சிறிலங்காவில் 100 விடுதிகள் சேதம் சுற்றுலாத்துறையை சீரமைக்க 1600 கோடி தேவை

## -சுற்றுலாத்துறை அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட "சுனாமி" பேரலையால் இலங்கையில் 38 ஆயிரம் பேர் பலியானார்கள். அத்தோடு சுமார் 100 விடுதிகள் சேதம் அடைந்து விட்டன. இதன் எதிரொலியாக சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்து விட்டது.

இதன் மூலம் இலங்கை சுற்றுலாத் துறைக்கு சுமார் 15 சதவீத வருவாய் இழப்பு ஏற்படும் என்றும் இலங்கையின் மொத்த வருவாயில் 3 சதவீதம் குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதிகளை சீரமைத்து சுற்றுலா மையங்களைப் பொலிவு பெறச் செய்ய ரூ.1,600 கோடி தேவைப்படும் என்று சுற்றுலாத்துறை அதிகாரி உதய நாணயக்காரா தெரிவித்தார்.


## முல்லைத்தீவு மாவட்டத்தில் சாரதி பதவி வெற்றிடங்களை அமைய அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரல்

இம்மாவட்டத்தில் கடந்த 2004.12.26 அன்று ஏற்பட்ட "சுனாமி" கடல் அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட புனரமைப்புப் பணிகளிலும், ஏனைய அத்தியாவசியப் பணிகளிலும் ஈடுபடுத்துவதற்கான அமைய சாரதி பதவி விண்ணப்பங்கள் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

01. தகைமை :-

(அ) பின்வரும் வாகனங்களைச் செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் உடையவர்களாகவும், 02வருடத்திற்குக் குறையாத தனியார் அல்லது திணைக்களங்களில் கடமையாற்றிய முன் அனுபவமும் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சையின்போது அதனை நிரூபிக்கக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

01. உழவு இயந்திரம் (ரக்டர்)
02. பவுசர்.
03. லொறி (பாரஊர்தி)
04. ரிப்பர்.
05. கலி எம்ரியர் பவுசர்.
06. பயணிகள் வான்.
07. பிக்அப் வாகனம்.
08. மற்றும் ஏனைய கனரக வாகனங்கள்.

(ஆ) வயது எல்லை- விண்ணப்ப முடிவுத்திகதியன்று 25 தொடக்கம் 55வரை.

02. நேர்முகப்பரீட்சையின்போது மேற்கூறப்பட்ட தங்கள் சகல தகுதிகளையும் உறுதிப்படுத்துவதற்காக அதற்கான ஆவணங்களின் மூலப்பிரதிகளைப் பார்வையிடும்பொருட்டு சமர்ப்பிக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

03. விண்ணப்பங்களை தாங்களாகவே உரியமுறையில் தயாரித்து, பூரணப்படுத்தி பதிவுத்தபால் மூலம், 'அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு' என்ற விலாசத்திற்கு 2005.02.07ஆந் திகதியன்றோ, அதற்கு முன்னரோ அனுப்பிவைத்தல் வேண்டும். நேரில் விண்ணப்பங்கள் கையேற்கப்பட மாட்டாது.

04. விண்ணப்ப தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "அமைய சாரதி பதவிக்கான விண்ணப்பம்" என்று தவறாது குறிப்பிடல் வேண்டும்.

திருமதி.இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-11215)

# பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு இல. அரசு உதவவில்லை

# அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வை.கோ பிரஸ்தாபிப்பு

(சென்னை)

**இலங்கையில் எமது தொப்புள்கொடி உறவுகொண்ட தமிழர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டபோது வஞ்சக சந்திரிகா அரசு நிவாரண உதவிகள் எதுவும் செய்ய வில்லை என புகார்கள் வந்த்தையடுத்து சந்திரிகாவுடன் பேசுமாறு பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தேன். அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் பேசினேன்.**

தமிழகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது ம.தி.மு.கழக பொதுச் செயலர் வை.கோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் அனுமான் கல்யாண மண்டபத்தில் ம.தி.மு.க ஆய்வுப்பணி நடைபெற்றது. அப்போது நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அப்போது ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ மேலும் பேசியதாவது,. 19 மாத சிறை வாழ்க்கைக்குப் பிறகு உங்களைப் பார்க்கும் போது உங்கள் முகத்தில் ஏற்படும் மந்தகாச புன்னகையைப் பார்க்கும் போது என் உடலில்,மனதில் இருந்த சோர்வு மறைந்துவிட்டது.

நான் உங்களுக்காக அதிகம் உழைக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும் சிறையிலிருந்து வெளியே வந்து சிறைவாசலிலேயே என்னுடைய பிரச்சாரத்தைத் தொடங்கி 40 தொகுதிகளிலும் 36 ஆயிரம் கி.மீ தூரம் பிரச்சாரம் செய்தேன். பொதுக் குழுவிற்கு பிறகு 1200 கி.ம் தூரம் நடைப் பயணம் மேற்கொண்டேன். 42 நாட்கள் பொதுமக்களைச் சந்திக்கும் நிகழ்ச்சி நடத்தினேன். இவையெல்லாம் பதவிக்காகவா? நூற்றாண்டில் தமிழக மக்கள் வாழ என்ன வழி என்று தொலைநோக்குச் சிந்தனையுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கிறேன். சுனாமி பேரழிவால் உயிரிழந்த ஆயிரக் கணக்கான மீனவ குடும்பங்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளைச் செய்தோம். உலக நாடுகளிடம் சுனாமிக்காக உதவி கேட்க மாட்டோம் எனப் பிரதமர் அறிவித்தது பாராட்டுக்குரியது.

ம.தி.மு.க உழைப்பால் உயர்ந்து கொண்டிருக்கிறது. ஒரு பாசக்குடும்பமாக வளர்ந்து வருகிறது. ம.தி.மு.க தேர்தலில் தோற்ற போது கூட அசைத்துப் பார்க்க நினைத்தார்கள். ஒரு செங்கல்லைக் கூட உருவமுடியவில்லை.

தமிழக முதலமைச்சர் மீது எனக்குத் தனிப்பட்ட விருப்பு,வெறுப்புக் கிடையாது.

வேலூர் ஜெயிலில் இருந்து விடுதலையான அன்று எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம், புன்முறுவல் ஆரவாரம் கண்டு நான் திக்குமுக்காடிப்போனேன். ஜாதி,மதம் கடந்து நீங்கள் என்மீது காட்டுகின்ற பாசம் என் உடல்,உள்ளச்சோர்வை நீக்கிவிட்டது. உங்கள் இதயச் சிறையில் நான் அடைபட்டுக்கிடக்கிறேன் என்றார்.

## ஸ்டாலின் பேச இருந்த மேடை தமிழகப் பொலிசாரால் அகற்றப்பட்டது

பாலக்கோட்டில் தி.மு.க துணைப் பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலின் பேச அமைத்திருந்த பொதுக்கூட்ட மேடையை பொலிசார் மற்றும் அதிகாரிகள் அகற்றிப் பரபரப்பு ஏற்பட்டது. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தி.மு.க துணைப் பொதுச் செயலாளரும்,தி.மு.க இளைஞரணி மாநில செயலாளருமான மு.க.ஸ்டாலின் கடந்த 2 நாட்களாக சுற்றுப் பயணம் செய்தார். நேற்று முன் தினம் மாலை 5 மணிக்கு அவர் பாலக்கோடு பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இதற்காக பாலக்கோடு ஒன்றிய தி.மு.க அலுவலகம் அருகே பிரமாண்ட மேடை அமைக்கப்பட்டிருந்தது.

பாலக்கோடு பஸ் நிலையத்தில் சீரமைப்புப் பணிகள் நடந்துவருவதால் அந்தப் பகுதியில் போக்குவரத்து இல்லை. இரு சக்கர வாகனங்கள் மட்டும் அந்த வழியாக சென்று வருவது வழக்கம். இதனைத் தொடர்ந்து அந்த இடத்தில் பொதுக் கூட்ட மேடை அமைக்க தி.மு.க நிர்வாகிகள் அனுமதி பெற்றிருந்தனர். மேடை அமைக்கப்பட்டு பணிகள் முடிந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் பொலிஸ் டி.எஸ்.பி கிருஷ்ணராஜ் பொலிசாருடன் அங்கு வந்தார். இங்கு கூட்டம்நடத்த அனுமதி வழங்கப்படவில்லை என அதிரடியாகத் தெரிவித்தார்: போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது எனக் கூறி மேடையை அகற்றினர்.



சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ டில்லி ஸ்பிரிங்டேல் பள்ளி மாணவிகள் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் நிதி வழங்கிய காட்சி. இந்தப் பணம் பிரதமரின் நிவாரண நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது

# இந்தியக் குடியரசு தினத்தன்று நாடு பூராகவும் தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டம்

## இந்திய உளவுத்துறை எச்சரிக்கை

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியைக் கொலை செய்ய தீவிரவாதிகள் ரகசியத் திட்டம் தீட்டியிருப்பதாக இந்திய உளவுத் துறை தெரிவித்துள்ளது.

வருகிற 26 ஆம் திகதி குடியரசு தினவிழா அன்று நாடு முழுவதும் நாசவேலைகளில் ஈடுபட தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டி வருவதாக புலனாய்வுத் துறையினர் ,எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில் வடகிழக்கு மாநிலத்தைச்சேர்ந்த உல்பா தீவிரவாதிகள் குடியரசு தினத்தன்று மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்தத்திட்டமிட்டிருக்கின்றனர்.

அசாம், நாகலாந்து,மிசோ ரம் உள்ளிட்ட வடகிழக்குமாநிலங்களில் உல்பா தீவிரவாதிகள் நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் தீவிரவாதிகள் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியைக் கொலைசெய்ய பல மாதங்களாகச் சதித்திட்டம் தீட்டி வருவதாகப் புலனாய்வுத்துறையினருக்கு ரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதற்காக உல்பா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் தலைநகர் டில்லியில் முகாமிட்டு உளவு பார்த்து வருவதாகவும், வருகிற 26 ஆம் திகதி டில்லியில் நடக்கும் குடியரசு தினவிழாவின் போது சோனியா காந்தியைக் கொலைசெய்யத்தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பதாகவும் தெரிய வருகின்றன.

சோனியா காந்தி தவிர வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங், அசாம் முதல்வர் தருண் தோகாய் ஆகியோரும் தீவிரவாதிகளின் பட்டியலில் இருப்பதாக டில்லி பொலிஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. இதையடுத்து டில்லி குடியரசு தினவிழாவில் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய டில்லி பொலிசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.



புதுவை மாநிலம் காரைக்கால் அருகே உள்ள தமிழகப் பகுதியான கிளிஞ்சல் குப்பத்தில் சுனாமிக்கு தங்களது வீட்டைப் பறிகொடுத்த இந்தத் தம்பதி தற்காலிகமாக ஒரு இருப்பிடம் அமைத்து தங்கியிருப்பதைப் படத்தில் காணலாம்.

# சங்கராச்சாரியாருக்கெதிராக 1870 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல்

(சென்னை)

காஞ்சி சங்கரராமன் கொலையில் 1870 பக்க குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி சங்கராச்சாரியாருக்கு தண்டனை உறுதியாகிறது என்று கூறப்படுகிறது.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கடந்த செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டார். இந்தக்கொலை வழக்கில் ஜெயேந்திரர்,விஜயேந்திரர் உட்பட 25 பேரைத் தனிப்படை பொலிசார் கைது செய்து கடந்த 4 மாதமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.




## சுனாமி நல நிதி கிரிக்கெட்

# பிளெமிங் அனல் பறக்கும் துடுப்பாட்டம் நியூசிலாந்துக்கு மகத்தான வெற்றி





நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங்கின் அபார துடுப்பாட்டத்தின் விளைவாக நேற்று கிரைச்சர்ச்சில் நடைபெற்ற முதலாவது சுனாமி நல நிதி கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி. உலக 11 பேர் அணியை 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது .

இப் போட்டியில் முதலாவதாக ஆடிய உலக 11 பேர் அணி 39.3 ஓவரில் 158 ஓட்டங்களை மட்டும் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பதிலுக்கு 159 என்ற வெற்றியிலக்கு நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து 16.1 ஓவரில் ஒரு விக்கெட்டை பிளெமிங்) மட்டும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. அணித் தலைவர் பிளமிங் அபாரமாக ஆடி 57 பந்துகளில் 9 சிக்சர் ர், 10 பவுண்டரிகள் அடங்கலாக 106 ஓட்டங்களைக் குவித்தார்.

உலக அணியில் முன்னாள் வீரர் கிறேம் கிக் அதிக பட்சமாக 44 ஓட்டங்களைப் பெற்றார். முரளிதரன் 3.1 ஓவர் பந்து வீசி 57 ஓட்டங்களைக் கொடுத்தார்.

பிளெமிங்கின் ஆட்டம் பற்றி குறிப்பிட்ட ஷேன்வோன் தனது 15 வருட காலப்பகுதியில் இவ்வாறான துடுப்பாட்டத்தை ஒருவர் செய்ததை காணவில்லை என்றார்.

9ஆவது விக்கெட் ஜோடியாக இணைந்த வோனும் சமிந்த வாசும் 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை வாஸ்ரப்பியினால் ரன்அவுட் ஆனார். நியூசிலாந்து ஆரம்ப இணையான பிளெமிங்கும் நதன் ஆஸ்லேயும் சிறந்த அடித்தளமிட்டனர். எனினும் வெற்றிக்கு11 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் பிளெமிங் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கிறிஸ் கெயான்ஸ் எடுத்த எட்டு ஓட்டங்களுடன் நியூசிலாந்து வெற்றி பெற்றது. 2ஆவது போட்டி நாளை வெலிங்டனில் நடைபெறும்.

## பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றுவோம் - சேவாக்



பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றுவோம் என்று நம்பிக்கை அளிக்கிறார் இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் சேவாக். பாகிஸ்தான் அணி அடுத்த மாதம் 25 இல் இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட், 5ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் மோத உள்ளது. இந்தத் தொடரில் இந்தியா வெற்றி பெற வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்றகிறார் தொடக்க ஆட்டக்காரர் சேவாக்.

"பாகிஸ்தான் அணியிடம் சமீபகாலமாக தொடர்ந்து தோல்விகளை சந்தித்து வருகிறோம். இதனால் அந்த அணி பலம் பொருந்தியதாக கருதப்படுகிறது. கடந்த முறை நாங்கள் பாக்.சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது அந்த அணி வீரர்கள் தொடரை எப்படி சந்திப்பது என்ற பதட்டத்துடன் காணப்பட்டனர். இதனால் வெற்றி எமது வசமானது. தற்போது நமது வீரர்கள் உள்ளூர் போட்டிகளில் விளையாடி வருகின்றனர். இந்த பயிற்சி பாகிஸ்தானை எளிதாக சமாளிக்க உதவும்" என்கிறார் சேவாக்.


## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஹென்மன் அதிர்ச்சித் தோல்வி



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. உலகின் இரண்டாம் நிலை வீரரான ரோடிக் (அமெரிக்கா) 3ஆவது சுற்றில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மெல்ஜரை எதிர்கொண்டார்.

இதில் ரோடிக் 6-2, 6-2, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

முன்னணி வீரர்களில் ஒருவரான கார்லோஸ் பெரேரா (ஸ்பெயின்) தோற்றுப்போனார். 6ஆம் நிலை வீரரான குயில்லர்மோ கோரியா 6-3, 6-2, 6-1 என்ற நேர் செட் கணக்கில் பெரேராவைத் தோற்கடித்தார்.



இதேபோல, 7ஆம் நிலை வீரரான ஹென்மன் (இங்கிலாந்து) 4-6, 2-6, 2-6 என்ற கணக்கில் ரஷ்ய வீரர் நிக்கோலியிடம் தோற்றுப்போனார்.

உலகின் முதல் நிலை வீராங்கனையான லிண்ட்சே டேவன் போர்ட் (அமெரிக்கா) 3ஆவது சுற்றில் செக்குடியரசை சேர்ந்த நிக்கோலியை எதிர் கொண்டார். இதில் டேவன்போர்ட் 6-2, 6-4 என்ற நேர்செட் கணக்கில் வென்றார். உலகின் 8 ஆம் நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் 6-3, 6-0 என்ற நேர் செட் கணக்கில் அன்னாவை (இஸ்ரேல்) தோற்கடித்து 4ஆவது சுற்றில் நுழைந்தார். அனஸ்சியா (ரஷ்யா), கரோலினா (குரோ ஷியா) ஆகியோரும் 4ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

## சானியா மிர்சாவுக்கு செரீனா பாராட்டு




"சானியா மிர்சாவுக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கிறது" என்று அவரை வென்ற முன்னணி அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் பாராட்டியுள்ளார்.

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 3 ஆவது சுற்றில் 7 ஆம் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் 6-1, 6-4 என்ற நேர் செட்டில் சானியா மிர்சாவை(இந்தியா) தோற்கடித்து நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

166 ஆவது இடத்தில் இருக்கும் சானியா முதல் இரண்டு சுற்றுகளில் அபார வெற்றி பெற்று கிராண்ட்ஸ்லாம் போட்டியில் 3 ஆவது சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை பெற்றார். அவர் 2 ஆவது செட்டில் செரீனாவுக்கு ஈடுகொடுத்து ஆடி அனைவரையும் கவர்ந்தார். 18 வயது சானியாவை 57 நிமிடத்தில் வீழ்த்திய செரீனா வில்லியம்ஸ் ஆட்டம் முடிந்ததும் சானியாவை பாராட்டினார். "இளம் வயதிலேயே சானியா ஆட்டம் மிக நிலையாகவும், சிறப்பாகவும் இருக்கிறது. அவருக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கிறது என்று புகழ்ந்தார்.

செரீனாவிடம் அடைந்த தோல்விகுறித்து சானியா மிர்சா கருத்து தெரிவிக்கையில், "எனது ஆட்டத்திறன் திருப்தி அளித்தது. முதல் செட்டில் சற்று பதட்டம் அடைந்து விட்டேன். இரண்டாவது செட்டில் முன்னணி வீராங்கனை செரீனாவுக்கு எதிராக சிறப்பாக ஆடினேன். இது ஒரு நல்ல அனுபவமாகும் என்றார்.

## இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்கா அணி தடுமாற்றம்



தென்னாபிரிக்காவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையில் நடைபெற்றுவரும் ஐந்தாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்கா இரண்டாம் நாளான நேற்றைய ஆட்டம் வெளிச்சமின்மையால் நிறுத்தப்பட்டபோது 9 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



செஞ்சூரியன் பார்க் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து தென்னாபிரிக்காவை துடுப்பெடுத்தாட அழைத்தது. அன்றையதினம் காலநிலை சீரின்மையால் முற்றாக கைவிடப் பட்டது.

துடுப்பாட்டத்தில் வில்லியர்ஸ் 92 ஓட்டங்களையும், ருடெல்ப் 35 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்று ஆட்டமிழந்தனர்.



பந்து வீச்சில் பிளின் டொப் நான்கு விக்கெட்டுக்களை யும், ஜோன்ஸ் மூன்று விக்கெட்டுக்களையும் கைல்ஸ், ஹொக்ஹாட் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். மேற்படி போட்டித் தொடரில் 2-1 என்ற நிலையில் இங்கிலாந்து முன்னணி வகிப்பது குறிப்பிடத் தக்கது.






ருமேனியாவில் 'தென் அமெரிக்க 20வயதிற்குட்பட்டோருக்கான கால்பந்து' போட்டியில் பராகுவே 4-2 என்றகோல் கணக்கில் ஈக்குவடோர் அணியை வீழ்த்தியது. பராகுவே வீரர் கிறிஸ்டியன் பொகாவடோ (வலது) பந்தை தடுத்து சக வீரருக்கு தட்டி விட முயல்கிறார்.

## நடிகர்களின் சுனாமி கிரிக்கெட்

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நடிகர்கள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி ஹைதராபாத்தில் நடக்கிறது. இதில் சிரஞ்சீவி, நாகார்ஜுன் வெங்கடேஷ், பாலகிஷ்ணா போன்ற முன்னணி நடிகர்கள் விளையாடுகின்றார்கள்.

## நாடு திரும்பினார் அக்தர்

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் அக்தர் காயம் காரணமாக முக்கோணத் தொடரிலிருந்து விலகி தாயகம் திரும்பியுள்ளார். எனினும் அடுத்தமாதம் ஆரம்பமாகும் இந்திய தொடருக்கு முன்பு அவர் குணமாகி அணிக்குத் திரும்பிவிடுவார் என அந்நாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

## கோரஸ் செஸ் சம்பியன் போட்டி ஆவது சுற்றிலும் ஆனந்த் வெற்றி



கோரஸ் செஸ் தொடரில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் ஐந்தாவது, ஆறாவது சுற்றில் வெற்றி பெற்றுள்ளார்.

உலகின் முன்னணி கிராண்ட் மாஸ்டர்கள் பங்கேற்கும் கோரஸ் செஸ் சம்பியன்ஷிப் தொடர் நெதர்லாந்தின் விஜ்க் ஆன் ஜி நகரில் நடக்கிறது. கடந்த வியாழனன்று ஐந்தாம் சுற்றுப் போட்டிகள் நடந்தன. இதில் ஆனந்த், ரஷ்யாவின் அலெக்சாண்டர் மோரோஸிவிச்சை சந்தித்தார். அபாரமாக ஆடிய ஆனந்த் 41 ஆவது காய் நகர்த்தலில் அலெக்சாண்டரை வீழ்த்தினார். ஆறாவது சுற்றுப் போட்டி நேற்று நடைபெற்றது. உக்ரேனின் பனோமரிவ்வை ஆனந்த் தோற்கடித்தார்.

இதன் மூலம் இவர் 3.5 புள்ளிகளுடன் ஆனந்த் இரண்டாவது இடத்திற்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் ஹங்கேரியின் பீட்டர் லிகோ,ரஷ்யாவின் விளாடிமிர் கிராம்னிக்கை சமன் செய்தார். லிகோ 3.5 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார்.

## சிந்தனைக்கு



வீழ்ந்தவர்கள் எல்லாம் விதையாகிப் போனதால் தான் விடுதலைப் போர் இன்றும் தொடர்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23ela @ yahoo .com

## அரசு போடும் முட்டுக்கட்டைகள்..!

ஐ.நா. தொடக்கம் இலங்கைக்கு விஜயங்களை மேற்கொண்ட சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு நிதியுதவி வழங்கியுள்ள நாடுகளின் தலைவர்கள் வரை நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் சென்றடைய வேண்டும் எனத் தமது அபிப்பிராயத்தை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தவகையில் சிறிலங்காவிற்கு விஜயம் செய்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மற்றும் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் அவர்களும் தாம் சந்தித்த புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றத்திற்கான பிரதி அமைச்சர் த.மு.திஸாநாயக்கா விடமும் நிவாரண உதவிகள் சகலருக்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை சந்திரிகா அரசாங்கமும் நிவாரண உதவிகள் பக்கச்சார்பின்றிப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது எனத் தம்மிடம் பகிர்ந்தளித்தல் தொடர்பாக வலியுறுத்தும் அனைத்துத்தரப்பினரிடமும் தெரிவித்து வருகின்றது பிரதி அமைச்சர் த.மு.திஸாநாயக்கவும் நோர்வேத்தரப்பிடம் இவ்வாறே தெரிவித்துள்ளார்.

ஆனால் அரசாங்கம் நிவாரணப் பொருட்களை பக்கச்சார்பின்றி அதாவது தமிழர் தாயகப்பகுதிக்கு வழங்கப்பட வேண்டியவற்றை உரிய முறையில் பகிர்ந்தளிப்பதாக இல்லை. உலர் உணவுப் பொருட்கள் போன்றவற்றை அரசாங்கம் காலம் தாழ்த்தியாயினும் அனுப்பிவைத்துள்ளதெனக் கொண்டாலும், ஏனைய நிவாரணங்கள் நிதியுதவிகள் உரியமுறையில் பகிர்ந்தளிக்கப்பட்டதாக இல்லை.

சிறிலங்கா அரசிற்குக் கிடைக்கப்பெறும் நிதியுதவியில் பெரும்பாலனவை தென்னிலங்கைக்கு குறிப்பாக காலி,மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கே பகிர்ந்தளிக்கப்படுகின்றது. அத்தோடு அரசாங்கமும், சுனாமியினால் பேரழிவு இடம்பெற்ற பிரதேசங்களும் அவையே என ஆரம்பம் முதலே காட்டிக் கொள்ளவே விரும்புகின்றன.

இதேவேளை நிவாரண உதவிகள் வடக்குக் கிழக்கிற்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்பது போன்றதொரு தோற்றப்பாட்டையும் அரசாங்கம் காட்டிக் கொள்ளவே விரும்புகின்றது. இதன் வெளிப்பாடே சுனாமி அனர்த்த செயலணிக் குழுக்களில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளமையாகும்.

இதன் மூலம் நிவாரணப் பணிகளில் விடுதலைப்புலிகள் இயக்கம் பங்கேற்பதானதொரு தோற்றப்பாட்டைக் காட்டிக் கொள்ள அரசாங்கம் முற்பட்டு நிற்கின்றது. ஆனால் மறுபுறத்தில் தமிழர் தாயகப்பகுதி புனர்வாழ்வுக்கென உரிய நடவடிக்கை எதையும் மேற்கொள்வதாக இல்லை.

அதுமட்டுமன்றி நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் சிலமுட்டுக்கட்டைகளைத் தோற்றிவிக்கவும் அரசாங்கம் முற்பட்டு நிற்கின்றது. இந்த வகையில் அமைந்ததே அரசாங்கம் அமுல் செய்துள்ள அவசரகாலச்சட்டம், நிவாரணப்பணிகளுக்குப் பொறுப்பாக இராணுவ அதிகாரிகளை நியமித்தமை, அவசர சேவைக்குழுவின் செயலாளர்களாக ஈ.பி.டி.பியினரை நியமித்தமை போன்றன உள்ளன.

அதாவது ஏதோ ஒரு வகையில் விடுதலைப்புலிகளின் நிவாரணப் பணிகளுக்கும் தமிழர் தாயகப்பகுதியில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுப் பணிகளுக்கும் முட்டுக்கட்டைபோடுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் அவ்வாறு இல்லாது விடில் மேற்சொன்ன அவசரகாலச்சட்டம், இராணுவ அதிகாரிகளிடம் நிவாரணப் பணிகள் ஒப்படைப்பு, ஈ.பி.டி.பியினரை நியமனம் செய்தவை தேவையற்றவையாகும்.

அதாவது சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் இன்னமும் தமிழர் மீதான ஒடுக்கு முறைச்சிந்தனையில் இருந்து விடுபடவில்லை. இதற்கென ஒடுக்குமுறைச்சட்டத்தையும், ஆயுதப் படையினரையும், தேசத்துரோகிகளையும் சுனாமி அனர்த்தத்திலும் பயன்படுத்திக் கொள்ளவே அது விரும்புகிறது.

இத்தகைய நிலையில் சுனாமி அனர்த்தத்திற்கெனக் கிடைக்கப்பெற்ற நிதியை சம அளவில் பகிர்ந்து கொள்வது என்பதும் விடுதலைப்புலிகளுடன் இணைந்து புனர்வாழ்வுப் பணியில் ஈடுபடுவதென்பதும் பேச்சளவிலானதாக மட்டுமே இருக்க முடியும். அதுமட்டுமல்ல இது ஒரு மோசடித்தனமானதுமாகும். ஆகையினால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பெயரால நிதி உதவி வழங்கும் சர்வதேச நாடுகள் அவை பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையக் கூடிய வழிவகைகளையும் உறுதி செய்தல் வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் சிறிலங்கா அரசினால் தமிழ்மக்களும் ஏமாற்றப்பட்டு உலகமும் ஏமாற்றப் பட்டதாகவே இருக்கும்.

# முல்லையில் "எச்சத்திலும் எழுவோம்"

# மாபெரும் ஆற்றுப்படுத்தல் நிகழ்வு

### முல்லை வலயக்கல்விப் பணிமனை ஏற்பாடு

கடந்த 26-12-2004 அன்று சுனாமி கடற கொந்தளிப்பால் பெரும் அவலங்களைச் சந்தித்துள்ள மக்களை அரங்கச் செயற்பாடுகள் மூலம் வெளிக்கொணர்ந்து எஞ்சிய உறவுகளை ஆற்றுப்படுத்தும் வகையில் 26.01.2005 காலை 8.30 மணிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெரியோர்கள், மக்கள் என்று அனைவரும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் ஒன்று கூடி மாபெரும் நிகழ்வென்றை நடத்தவுள்ளனர்.

இது தொடர்பாக முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது.

எச்சத்திலும் எழுவோம்;

முல்லை மாநகரில் மாபெரும் ஆற்றுப்படுத்தல் நிகழ்வு; 26.12.2004 அன்று பேரலை அள்ளிச் சென்றது போக எஞ்சிய உறவுகளை வாழ வழிப்படுத்த கல்விப்புலமாற்றும் நல்லதோர் ஆற்றுப்படுத்தல் எச்சத்திலும் எழுவோம்.

அங்கு வாழும் உறவுகள் வழமைக்குத் திரும்ப வேண்டும் எங்கும் பரந்து மிச்சமாக உள்ள வளங்கள் மீண்டும் சுரக்க வேண்டும், பள்ளிகள் தொடரவேண்டும், படிப்பு நடைபெறவேண்டும், அலுவலகங்கள் இயங்க வேண்டும் அனைவரையும் ஆற்றுப்படுத்த வேண்டும. அதற்கு ஓர் அத்திவாரம் எச்சத்திலும் எழுவோம். 26.01.2005 காலை 8.30 மணிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மக்கள என அனைவரும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் ஒன்றுகூடி எஞ்சிய உறவுகளுடன் பழையதை நினைத்து புதுமைக்கு அழைத்துச் செல்லும் இந்நிகழ்வில் அனைவரும் இணையுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறிலங்காவை மீளக் கட்டியெழுப்பக்கூடிய தலைமையை அரசிடம் எதிர்பார்க்க முடியாது

### ஜே.வி.பி அமைச்சர் லால்காந்த சாடல்

(கொழும்பு)

சிறிலங்காவை மீளக் கட்டியெழுப்பக்கூடிய தலைமையை தற்போதைய அரசிடம் இருந்து எதிர்பார்க்க வேண்டாம் என சிறிலங்கா அரசின் மீதான தங்களது அதிருப்தியை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி கட்சியின் அமைச்சர் லால்காந்த நேற்று முன்தினம் தெரிவித்தார்.

முன்னொரு காலத்தில் சக்கரவர்த்தி ஒருவர் முட்டாள்த்தனமாக நிர்வாணமாக பவனிவந்த கதையை நினைவுபடுத்தி, அப்படியான ஒரு முட்டாளாகவே சிறிலங்கா அரசு செயற்படுகின்றது எனவும் குறிப்பிட்டார். நாடு முன்னேறிச் செல்ல வேண்டுமானால், தைரியமாக எதையும் சந்திக்ககூடிய மக்கள் தற்போதைய தலைமைக்கு வழிகாட்ட முன்வரவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். சிறிலங்கா அரசின் ஒற்றுமைக்கான அழைப்பு, வெறும் ஏமாற்று வேலையே. பல மாதங்களாக ஜே.வி.பி. யுடன் பேச்சுவார்த்தை நடத்தி கூட்டாட்சி அமைத்த போதும், அப் பேச்சு வார்த்தைகளில் அளித்த வாக்குறுதிகளையோ அல்லது நம்பகத்தன்மையையோ சந்திரிகாவால் காப்பாற்ற முடியவில்லை. ஒரு சாதாரண கூட்டணிக் கட்சிக்கு அளித்த வாக்குறுதியையே காப்பாற்றாத ஒரு தலைமையிடம், அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து நாட்டு நலன் கருதி தேச ஒற்றுமையினை காப்பாற்ற முன்வருவாரா எனவும் அவர் கேள்வி எழுப்பினார். சுனாமி அனர்த்தத்தின் பின் கூட்டப்பட்ட முதலாவது பாராளுமன்ற கூட்டத் தொடரில், ஏற்பட்ட அனர்த்தங்கள் பற்றி எதுவித முக்கியத்துவமும் கொடுக்கப்படாமல் வழமையான கூட்டமாகவே அதனை நடத்தியதையும் உதாரணம் காட்டிய அவர், சிறிலங்கா அரசின் பொறுப்பற்ற தனத்தையும் சுட்டிக்காட்டினார்.

## மீள்....

வர் அவர்களுடான சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் அனர்த் தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலவழிகளில் உதவலாம். முதலா வதாக உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பிற்கு உதவி வழஙகல் மற்றவழிகளாக வடக்கு,கிழக்கு ஐ.நா. அமைப்பினூடாக புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகளிற்கு உதவி வழங்கல் இறுதி நிலைப்பாடாக அரசாங்கமும் விடுதலைப்புலிகளினதும் ஒத்துழைப்பும் பங்களிப்பையும் விரும்பு கிறோம். இதுவே நாட்டை மீளக்கட்டியெழுப்பு வதற்கும் சர்வதேச உதவியைக் பெறுவதற்கு முக்கிய மானதாகும் என்றார்.

## சிறிலங்காவிற்கு...

ஜே.வி.பி. அமைதி முயற்சிகள் தொடர்பாக சனாதிபதியுடன் ஒத்துப் போகாத போக்கைக் கடைப்பிடிப்பது குறித்து அண்மையில் உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமைகள் ஆழ்ந்த கவலை வெளியிட்டு அமைதி முயற்சிகள் தொடர்பான ஜே.வி.பியின் போக்கு ஆரோக்கியமான வகையில் மாற்றம் பெறவேண்டும் என வலியுறுத்தியிருந்தன. ஆகவே அடுத்தவாரம் நடைபெறவுள்ள இந்த மீளாய்வுக் கூட்டத்தில் இது குறித்தும் பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக்கூட்டத்தில் கலந்துகொள்ள அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் அடுத்த வாரம் பிறஸல்ஸ் பயணமாகிறார் என்று இராஜாங்க அமைச்சின் பேச்சாளர் ரிச்சேர்ட் பௌச்சர் தெரிவித்துள்ளார். சிறிலங்காவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான மனிதாபிமான மற்றும் அடிப்படை அபிவிருத்தி உதவிகள் குறித்து இங்கு கலந்துரையாடப்படும் என்றும் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது உதவிகளை எவ்வாறு சீரிய முறையில் வழங்கலாம் என்பது குறித்தும் உதவி வழங்கும் நாடுகளின் தலைமைகள் ஆலோசனை நடத்தும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## சுனாமியால் சிதை....

வினர் அப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தற்போதைய நிலவரம்,நிவாரண நடவடிக்கைகள், மீள்கட்டுமானத்திட்டங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடினர்.

இதேவேளை முல்லை நகரப் பகுதியில் வைத்து தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்களையும் சந்தித்து இப்பகுதியின் பாதிப்புகள் மீள்கட்டுமானங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினர். அடுத்து முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திவரும் செயலணிக்குழு அலுவலகத்துக்குச்சென்று அதன் செயற்பாடுகள் பற்றி கேட்டறிந்தனர்.

இதில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்,பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்கெல்கேசன்,நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்கெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிறஸ்கர், உள்ளிட்ட நோர்வே குழுவினர் கலந்துகொண்டனர். இவர்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை,தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் சோ.தங்கன்,சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், திட்டமிடல் செயலகப்பணிப்பாளர் தூயவன்,சிரான்திட்டப் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட மேற்படி குழுவினர் கடல் அனர்த்தத்தால் சிதைவடைந்த மீன்பிடி வள்ளங்களை சீர்படுத்தும் வேலைகளையும் முல்லை மாகாவித்திலாயத்துக்கு அருகில் அமைந்துள்ள சீர்களத்துக்கு சென்று பார்வையிட்டுச்சென்றமை குறிப்பிடத்தக்கது.

(லோ,தீ,20)

## சுனாமியால்....

இத்தாலிய பிரதிப் பிரதமர் 'ஷியான் பிராங்கோ கொழும்பில் அரசியல் பிரமுகர்களுக்கு விருந்துபசாரம் வழங்கினார். இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுத்தலைவர் இரா.சம்பந்தன எம்.பியிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே வட கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான உதவிகள் தொடரும் என்று இத்தாலியின் பிரதிப்பிரதமர் தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருந்துப்பொருட்களை இத்தாலிய அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் நேரடியாக கையளித்திருந்தது. இது பாராட்டத்தக்கது என்று கூறியுள்ள சம்பந்தன் எம்.பி. இத்தாலிய பிரதிப் பிரதமரிடம் நன்றியும் தெரிவீத்துள்ளார். இத்தாலிய பிரதிப்பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ் மக்கள் ஊக்கம் உடையவர்கள், இத்தாலியில் உள்ள தமிழ் மக்கள் நல்ல பண்புள்ளவர்கள் தமிழர்களுக்கான உதவிகளை இத்தாலிய அரசாங்கம் தொடர்ந்தும் வழங்கும் என்று கூறியுள்ளார்.





தமிழீழ தேசியத்தலைவர் அவர்களை நோர்வே உயர்மட்டக்குழு சந்தித்த போது

## பாதிக்கப்பட்ட....

சந்திப்பின்போது என்னென்ன விடயங்கள் பேசப்பட்டன என்று கூற முடியுமா?

இச் சந்திப்பு மிகவும் முக்கியமானது. சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதன் பின்பு எமது தேசியத் தலைவர் சமாதான தூதுவர்களாக நீண்ட காலமாக செயற்பட்டுவரும் நோர்வே அமைச்சர்களுடன் நேரடியாக சந்தித்து எமது மக்களின் நிலைமை பற்றியும், அரசியல் நிலைமை பற்றியும், சமாதான சூழ்நிலை பற்றியும் விபரமாக இரண்டு மணி நேரம் கலந்துரையாடியுள்ளார்.

எமது தலைவர் ஆரம்பத்திலிருந்து நோர்வே அமைச்சர்களிடம் கூறியது என்ற வென்றால் சுனாமி அனர்த்தத்தால் வந்த பாதிப்புக்கள் மட்டுமல்லாமல் ஏற்கனவே கடந்த முப்பது வருடங்களாக எமது மக்கள் பெரிய அழிவுகளையும், உயிர்ச் சேதங்களையும் சந்தித்து வந்திருக்கின்றார்கள். வட கிழக்கு மாவட்டங்களிலுள்ள எமது வளங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன.

மாதகலில் இருந்து அம்பாறை வரைக்கும் எத்தனையோ தமிழ்க் கிராமங்கள், மீனவக் கிராமங்கள் இன்றும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் உள்ளன. அந்தக் கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அங்கு மக்களும் வசிக்கவில்லை.

ஏற்கனவே அங்கு பாரிய அழிவு ஒன்று யுத்தத்தால் ஏற்பட்டிருக்கின்றது. இதனை எமது தலைவர் ஆமியால் ஏற்பட்ட சுனாமி என்கின்றார். அதற்கு பின்புதான் இந்தச் சுனாமி என்ற பெரும் அழிவு வந்திருக்கின்றது. இந்த அழிவும் எமக்கு பெரும் பாதிப்பை தந்திருக்கின்றது. இங்கு தான் அதாவது வடகிழக்கிலேதான் பெரும் அழிவைத் தந்திருக்கின்றது.

இங்கு தான் கூடுதலான மக்கள் இறந்திருக்கின்றார்கள். கூடுதலான இழப்புக்களும் ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, இரண்டையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். எனவே, யுத்தத்தையும் மறந்து இனப்பிரச்சினையையும் மறந்து இந்த சுனாமியுடன் நிற்காதீர்கள். எமது மக்களின் நீண்ட வரலாற்றையும் பாருங்கள் நீண்ட வரலாறு என்றால் கடந்த ஐம்பது வருடகால இனரீதியான ஒடுக்கு முறை வரலாறு இந்த வரலாறு எமது மக்கள் அனுபவித்த பேரழிவு.

சர்வதேச சமூகம் இப்போதுதான் அதாவது இந்த சுனாமி அனர்த்தத்தின் பின்பு தான் இந்தப்பக்கத்தில் கூடுதலான கவனத்தை திருப்பியிருக்கின்றது. ஆகவே இந்த நேரத்தில் நீங்கள் எமது மக்களின் ஒட்டு மொத்தமான முழுப்பரிமானமான பிரச்சினைகளையும் பார்த்தல் வேண்டும். எமது மக்களிற்கு நிச்சயமாக இந்த அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லை. ஏனென்றால் காலம் காலமாக அரசாங்கங்கள் இப்படியான பேரழிவுகள், அனர்த்தங்களை தங்களது அரசியல் லாபத்திற்காக பயன்படுத்தின. ஆகவே, நீங்கள் இந்த முறையாவது செம்மையாக இதில் தலையிட்டு இன்று உலகம் முழுவதிலும் இருந்து வருகின்ற உதவிகளைப் பெற்று எடுத்து அதனை சமத்துவமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற ரீதியில் அவர்கள் சிங்களவர்களாக இருக்கட்டும், முஸ்லிம் மக்களாக இருக்கட்டும் அல்லது தமிழ் மக்களாக இருக்கட்டும் யாராக இருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நேரடியாக சென்றடையக்கூடிய ஒழுங்குகளை செய்யுங்கள். அதை நீங்கள் கட்டாயம் செய்யவேண்டும். ஏனென்றால் கடந்த ஐந்து வருடங்களாக நீங்கள் இந்த சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றீர்கள் உங்களுக்குத்தான் இது குறித்து அதிகம் தெரியும். அதற்குப் பிறகு நோர்வே பிரதிநிதிகள் தாங்கள் இரண்டு தரப்பையும் ஒரு பொதுவான கொள்கைத் திட்டத்திற்கு கீழ் கொண்டுவர விரும்புவதாகக் கூறினார்கள்.

அது எப்படி என்றால் அரசாங்க கட்டமைப்புகள் மூலம் இல்லாமல், அரசமயப்படுத்தப்பட்ட நிர்வாகங்கள் மூலம் இல்லாமல் பொது மக்கள், பொது நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் கூடுதலாக பங்குபற்றும் முறையில் இந்த நிவாரண ஒதுக்கீடுகளை செய்யக் கூடிய ஒரு திட்டத்தை கொண்டுவந்து சர்வதேச உலகத்திற்கு அந்த கொள்கைத் திட்டத்தை கொடுத்து அவர்கள் அதை நிறைவேற்றுவார்கள். அவர்கள் அதை நிறைவேற்றுவதுடன் சர்வதேச சமூகம் எதனை விரும்புகின்றது என்றால் இரண்டுதரப்பும் இதற்குள் பிரச்சினைப்படாமல் இந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான ஒரு பொதுவான கட்டமைப்பு ஒன்றை உருவாக்குமாறு கூறினார்கள்.

அதில் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் இந்த பொதுவான கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஏற்கனவே ஒரு மட்டத்தில் அரசாங்கத்துடன் நாங்கள் கதைத்துக் கொண்டிருக்கின்றோம். அதாவது கொழும்பிலும், கிளிநொச்சியிலும் உள்ள சமாதானச் செயலகங்கள் ஊடாக இந்தப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றது. எவ்வாறு என்றால் இரண்டு பேரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய மாதிரி ஒரு செயல் முறை வகுப்பது அது இன்னமும் முடியவில்லை அதற்குள் ஒரு சிக்கலும் உள்ளது. அதற்குள் நாங்கள் ஆழமாக பேசவிரும்பவில்லை. என்ன பிரச்சினை என்றால் அதுவேறு, இனப்பிரச்சினை வேறு, உரிமைப்பிரச்சினை வேறு அதாவது எமது மக்களின் உரிமைப் பிரச்சினை இந்த சுனாமியால் தீரப்போவதில்லை. இன்னும் தீவிரமடையுமே தவிர தீரப் போவதில்லை. ஆனால் எங்களின் அரசியல் பிரச்சினையை ஒரு சுமுகமான புறநிலையை உருவாக்குவதற்கு அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்தால் இனப்பிரச்சினைகளை தீர்வுக்கான ஒரு அத்திவாரத்தைப் போடலாம். அது அரசாங்கம் செய்ய வேண்டிய விடயம்.அதாவது நல்லமுறையில் இந்த இனைப்பிரச்சினையை அணுகி நல்லெண்ண முயற்சிகளை எடுத்து அதற்கான ஒரு அத்திவாரத்தைப் போட அரசாங்கம் இந்த அனர்த்தத்தைப்பயன்படுத்தலாம்.

ஆகவே இந்த பேச்சுவார்த்தையில் நோர்வே அரசாங்கம் கேட்டுக் கொண்டது என்ன வென்றால் இரண்டு தரப்பையும் ஒரு பொதுவான கட்டமைப்பை கொண்டுவந்தால் சர்வதேசத்தின் நிதி உதவி எங்களிடம் வந்து சேருவதற்கு இலகுவாக அமையும் என்று.

**இனப்பிரச்சினை பற்றி ஏதாவது பேசினீர்களா?**

இனப்பிரச்சினை பற்றி நாங்கள் எதுவும் பேசவில்லை. அவர்கள் எதிர்பார்ப்பது என்ன வென்றால் இந்தச் சுனாமி அனர்த்தத்தின் அடிப்படையில் இரண்டு தரப்பும் ஒன்று சேர்ந்து ஏதாவது ஒரு இணக்கப்பாட்டைக் கண்டு ஒரு கட்டமைப்பை உருவாக்கினால் அது சமாதான முயற்சிக்கு வழிகோலும் என்ற பார்வையில் அவர்கள் பார்க்கிறார்களே ஒழிய இனப்பிரச்சினை தொடர்பாக அல்லது இனப்பிரச்சினை தீர்ப்பது சம்பந்தமாகவோ பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கின்ற அந்தக் கட்டத்திற்கு அந்தச் சந்தர்ப்பத்தை இந்தச் சந்திப்பில் கதைக்கவில்லை. அவர்கள் சொன்னது என்னவென்றால் தாங்கள் இங்கு வந்ததற்குக் காரணம் தென்னிலங்கையிலும், வடக்கு கிழக்கு மாகாணத்திலும் குறிப்பாக முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட அழிவுகளையும் பார்வையிட்டு எவ்விதமான பாதிப்புக்கள் என்று எங்களிடம் இருந்து நிறையத் தகவல்களை எடுத்து செல்கின்ற னர்.

**வட கிழக்குப் பகுதியில் பகிர்ந்தளிக்கப்படுகின்ற நிவாரணப் பொருட்கள் தொடர்பாக உங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்று கூறினீர்கள் அது எந்த வகையில் உங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை?**

இதனை பல மட்டங்களில் பார்க்க வேண்டும். இந்த நிவாரணம் என்னும் போது பொதுவாக நிவாரணம் என்று பார்க்காதீர்கள். ஏனென்றால் ஒரு பேரழிவு ஏற்பட்ட பின்னர் முதலாவது தேவை என்னவென்றால் மக்களுக்கு உடனடியாக உணவு, மருத்துவம் மற்றும் அவர்களுக்கு இருப்பதற்குரிய தற்காலிகமான இருப்பிடம் இதுதான். எல்லோரும் செய்ய வேண்டிய விடயம். அதில் ஒன்று உங்களுக்கு நல்லாகத் தெரியும். எமது இயக்கம் முழுப்படையணிகளையும் இந்தப் பணியில் இறக்கினார்கள். இந்த அழிவு ஏற்பட்ட உடனேயே அப்பணியில் இறக்கியுள்ளனர்.

அவர்கள் அந்தக் கைங்கரியங்களை சிறப்பாகச் செய்துள்ளனர். அதனை சர்வதேச பத்திரிகைகள் பாராட்டி நல்லவடிவாக எழுதியுள்ளார்கள்.

அதற்குப் பிறகு தான் லண்டனில் சந்திரிகாவிற்கு என்ன நடந்தது என்று தெரியும். ஆனால் எமது போராளிகள் உடனேயே களத்தில் இறங்கிச் செயற்பட்டார்கள். இப்போது என்னவென்றால் அந்த முதற் கட்டமான உணவு, உடை மருந்துவகை என்பன எல்லா நாடுகளில் இருந்தும் வந்து குவிகின் றன. சர்வதேச சமூகத்தில் உள்ள எமது தமிழ் மக்களே நிறைய உதவிகளைச் செய்துள்ளனர். அந்த முதற் கட்ட அவசர மனிதாபிமானப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. ஒட்டு மொத்தமாக அதில் நாங்கள் பெரிய அளவில் குறை கூறவில்லை. அவர்கள் ஆரம்பத்தில் ஒன்றும் அனுப்பவில்லைத் தான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அனுப்பி மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களும் அதில் இறங்கி பல வேலைத் திட்டங்களை செய்துள்ளனர் அது முதற்கட்டம்.

இப்பொழுது இரண்டாவது கட்டம் என்ன வென்றால் மக்களுக்கு இருப்பிடங்கள் தேவை தொழில் வாய்ப்பு தேவை, அவர்களின் தொழில் துறையை கட்டி எழுப்ப வேண்டிய தேவையுள்ளது. குறிப்பாக இந்தச் சுனாமி அனர்த்தத்தால் தமிழ் மீனவ சமூகம் தான் கூடுதலாகப் பாதிக்கப் பட்டுள்ளது. சிங்கள முஸ்லிம் மக்களின் நிலையும் அவ்வாறே தான் உள்ளது.

நிவாரண புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைகளை எங்களால் ஒரு தனிப்பட்ட அமைப்பாக செய்ய முடியாது. இதற்கு சர்வதேச நிதி தேவை இதில் தான் கூடுதலான வெளிநாட்டு நிதிகள் வரும். இதை சமத்துவமாக பகிர்ந்தளித்து சகல மக்களுக்கும் வழங்க வேண்டும். உதவிகள் கிடைக்கக் கூடிய முறையில் வேலைத்திட்டங்களை அமைப்பது தான் இனி வருகின்ற இரண்டாம், மூன்றாம் கட்டம் இதற்குத்தான் ஒரு நடைமுறைகள் வேண்டுமென்று நோர்வேயும் நாங்களும் அதை விரும்புகிறோம். நாங்கள் அதற்கு ஒத்துழைக்கத் தயாராகவும் இருக்கின்றோம். எனவும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

கேள்விகளுக்கு அவர் மேலும் பதிலளிக்கையில்

நாம் அரசிடமிருந்து எந்தச் செய்தியையும் பெறவில்லை. நோர்வேதரப்பினர் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர். நாம் அப்பேச்சைப் பற்றிக் கேட்கவில்லை. நாங்கள் இவ் உதவிகளை எவ்வாறு சரிவரப் பெறுவது என்பது பற்றிக் கலந்துரையாடினோம். மனித நேய அவலத்தை அரசியல் மயப்படுத்தவோ இராணுவமயப்படுத்தப் படவோ கூடாது. இவ்வழிவின் பின் சில அரசியல் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன எனத் தலைவர் குறிப்பிட்டுக் காட்டினார்.

இது இலங்கையின் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிற்கான பொதுவான அழிவு. அரசு இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பெரியளவிலான நிதியைச் செலவிடுவதற்கான நேரம் இது வல்ல. அவர்களின் பிரதான குறிக் கோள் இராணுவக் கட்டமைப்பைக் கட்டி யெழுப்புவதே என கருதமுடிகிறது. எமது மக்கள் தசாப்த காலமாக இனப்பிரச் சினைகளிற்கான பாதிக்கப்படைந்துள்ளனர். நாம் பாதிப்படைந்தவர்களின் மனிதநேய நடவடிக்கைகள் வெளிப்படையான முறையில் சென்றடைய வேண்டும் என விரும்புகிறோம். இருதரப்பு புரிந்துணர்வுடனும் நம்பிக்கையுட னும் மனிதநேய உதவிகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட வேண் டும் என்றார்.

தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் அவர்கள் தலைமையிலான உயர்மட்டக் குழுவினார் கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமிழீழ தேசியத்தலைவர் அவர்களுடன் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும், திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களும், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களும், தமிழீழ கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களும், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களும், நோர்வே தரப்பில் நோர்வே நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் ஹில்ட்.எவ்.ஜோன்சன், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், இலங்கைக் கான நோர்வே தூதுவர் ஹான் பிறஸ்கர், விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் மற்றும் குழுவி னரும் கலந்து கொண்டனர்.

இரண்டு மணி நேரம் இடம் பெற்ற மேற்படி சந்திப்பினையடுத்து பிற்பகல் நோர்வே குழுவினர் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லை நகர் பகுதியினை நேரில் சென்று பார்வையிட்டதுடன் பிற்பகல் 5.00 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து உலங்குவானூர்தி மூலம் கொழும்பு திரும்பினர்.

(சோ,கு)

## இரு....

பட வான்படையினர் தடை விதித்துள்ளனர்

இந்த இரண்டு உலங்கு வானூர்திகளின் பாகங்களும் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்டவை எனத் தெரிய வந்துள்ளது. (32)

## மன்னாரில்...

தேசம் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, இந்த அதிர்வு காரணமாக பெருமளவு மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். இதற்கான ஒழுங் குகளை மன்னார் மாவட்ட அரசியல் துறையினர் மேற்கொண்டனர். (வேறொரு செய்தி 5ஆம் பக்கத்தில்) (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.